# "ராஜரத்தின போன்று ஆர். ஜி. யும் செல்வாக்கு இழப்பர்"


Registered as a NewsPaper in Ceylon — விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 12
இதழ் 96
தேசியத்தினசரி

யாழ்ப்பாணம் வைகாசி 4 ரபி. அவ் 11 திங்கட்கிழமை [18-5-70]



எல்லோர்க்கும் எமது
மீலாத்
வாழ்த்துக்கள்!

புத்துணர்ச்சிக்கும்
உற்சாகத்திற்கும்
பாவியுங்கள்



அண்ணா
கோப்பி

அண்ணா இண்டஸ்றி
இணுவில் தெற்கு, இணுவில்.

எல்லோருக்கும் எமது
மீலாத் வாழ்த்துக்கள்
பூரண திருப்தி
அளிப்பது
பி. வி. எம்.
ஒறென்ஜ் பீடி
தயாரிப்பாளர்கள்
பி. வி. எம்.
ஒறென்ஜ் பீடி கம்பனி
நவாலி றோட், ஆனைக்கோட்டை
யாழ்ப்பாணம்.

JAFFNA COLLEGE — 22 MAY 1970 — UNDERGRADUATE LIB


## திருமலையில் சிறிமா ஹேஷ்யம்

திருக்கோணமலை, ஞாயிறு

"ஐக்கியதேசியக்கட்சி இன்று தமிழரசுக்கட்சியை விவாகரத்துச் செய்திருக்கின்றது. மீண்டும் பதவிக்கு வந்தால் தமிழரசாரோடு இணைந்து ஆட்சியை நடத்தும்".

திருக்கோணமலை சிறிலங்காசுதந்திரக்கட்சி வேட்பாளர் திரு. ஜமால்தீனை ஆதரிக்குமுகமாக மூற்றவெளி அரங்கில் திரு. பி. டி. சில்வா ஜே.பி. தலைமையில் நடைபெற்றபிரச்சாரக் கூட்டத்தில் சிறிலங்காசுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு கூறினர்.

திருமதி சிறிமா மேலும் கூறியதாவது:-

1960-ம் ஆண்டு ஐ. தே. கட்சி சிறிலங்காவுக்கு எதிராக பொய்ப் பிரச்சாரம் செய்தபோது, சிறிலங்கா சுதந்திரக்கட்சி தமிழரசுக் கட்சியோடு ஒரு இரகசிய ஒப்பந்தம் செய்திருக்கிறதென்றும இந்த ஒப்பந்தத்தினால் இலங்கையை இரண்டாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி பிரிக்கப்போகின்றது என்றும் சொன்னார்கள். நாங்கள் என்றும் தமிழரசுக்கட்சியோடு ஒப்பந்தம் செய்யவுமில்லை செய்யப்பேவதுமில்லை.

ஐக்கிய தேசியக்கட்சி தமிழரசுக்கட்சியோடு 1960-ம் ஆண்டு ஓர் இரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டது இந்நாட்டு மககள் அறியாததல்ல.

1958-ம் ஆண்டு நடைபெற்ற இனக்கலவரத்துக்கு நாங்கள் தான் காரணமென்று இன்று தமிழ்மக்களிடையே ஒரு கருத்துலவிவருகின்றதை நான் உணருவேன். இனக்கலவரம் நடந்தபோது கலவரம் இந்நாட்டில் பெருங் குழப்பத்தை விளைவிக்கக கூடாது என்பதற்காக நாங்கள் தமிழரசுத் தலைவர்களைக் கைது செய்து கலவரத்தை அடக்கினோம் இனக்கலவரம் நடப்பதற்கு காரணமாக இருந்தவர்கள் திரு டட்லி சேனநாயக்காவும் ஜெயவர்த்தனவும் தான் அவர்கள் கண்டிக்கு பாதயாத்திரைபுறப்பட்ட போது தான் இந்தக்கலவரம் ஆரம்பமாகியது.

யாழ்ப்பாணப் பகுதியில் சிறிலங்கா கட்சிக்காரர் காலடி எடுத்து வைக்க முடியாது என்று ஐக்கிய தேசியக்கட்சியினர் கூறிவருகின்றார்கள் நாங்கள் ஒரு வேட்பாளரை யாழ் குடாநாட்டில் நிறுத்தியிருக்கின்றோம் எதற்காக யூ என் பி ஒருவேட்பாளரை நிறுத்தமுடியவில்லையென்று கேட்கிறோம்.

சிங்களமொழியை அரசாங்க மொழியாக்க கொண்டு வந்தது சிறிலங்கா அரசாங்கம் ஆனல் நடைமுறையில் நல்லபடி மொழியைப் பாதுகாக்கத் தவறி விட்டது ஐ தே கட்சி. திரு பண்டாரநாயக்கா தலைமையில் தான்இந்நாட்டுக்குசுதந்திரம் கிடைத்தது. சுதந்திரத்துக்காகப் பாடுபட்டவர் சூடுபட்டுச் செத்தார்.

"துவேஷம் பேசிவந்த கே. எம். பி. ராஜரத்தின இன்று அரசியலில் செல்வாக்கு இழந்து ஐக்கிய

(4-ம்பக்கம் பார்க்க)

# நஞ்சு கலந்த உணவு உண்டு இருவர் மாண்டது உண்மையா?

## இதுவரை இப்படி யாரும் புகார் செய்ய வில்லையாம்

### வயிற்றோட்ட நோயால் 2 பேர் மரணம், பொலிசார் புலன் விசாரணை

யாழ்ப்பாணம், திங்கள்

கிளிநொச்சித் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவருக்கும் அவரையும் அவரது கட்சியையும் சேர்ந்த ஆதரவாளர் சிலருக்கும் உணவில் நஞ்சுகலந்து கொடுக்க முனைந்ததாகவும் ஆனல் வேட்பாளர் தப்பிவிட்டதாகவும் வேறுசிலர் இதனல் பாதிக்கப்பட்டதாகவும் யாழ்ப்பாணப் பகுதியில் வதந்தி பரப்பப்பட்டு வருவதாக வட பகுதிப் பொலிஸ் அதிபருக்குச் சிலர் புகார்செய்துள்ளனர். ஓர் அரசியல் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கூட இந்த நஞ்சுகலந்த செய்திபற்றிச் சிலர் பிரசாரம் செய்வதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது.

யாருக்காவது நஞ்சு கலந்த உணவு கொடுக்கப்பட்டதாகவோ, நஞ்சு கலந்த [illegible]

இம் மாதம் [illegible] வட்டக்கச்சியில் நடந்த ஒரு தேர்தல் பிரசார [illegible]

[illegible] தெரியவந்துள்ளது. நஞ்சுகலந்த உணவு [illegible]

மசோதா அமுலானல்...

## கரையோரத் தமிழரின் 'அழுகுரல் தினமும் கேட்கும்'

ஊரதீவு, ஞாயிறு

"அடையாள அட்டைச் சட்டத்தை எதிர்த்து முதன் முதலாகச் சிறைசெல்பவன் நான்தான். இந்தச் சட்டம் இந்த நாட்டிலே அமுல் நடத்தப்படுமானல் நிச்சயமாகத் தமிழர்கள் இங்கே நிம்மதியாக வாழமுடியாது. இந்தச் சட்டம் அமுல்நடத்தப்பட்டால் தமிழ்மக்கள் வாழுகின்ற கரையோரப் பகுதிகளிலே தினசரி அழுகைக் குரல் ஒலித்துக் கொண்டுதான் இருக்கும். இதற்காகத்தான் அடையாள அட்டைமசோதாவை நான் ஆட்சிமன்றத்தில் தன்னந்தனியனக நின்று எதிர்த்தேன். இந்த மசோதா விவாதத்தின் போது நான் நடந்துகொண்டது சரிதான என்று நீங் [illegible]

கூட்டத்தில் திரு. நவரத்தினம் தொடர்ந்து பேசியதாவது:

தாங்கள் டட்லி சேனநாயகாவினல் ஏமாற்றப்பட்டு விட்டதாகத் தமிழரசார் கூறுவதை நான் கேட்டுள்ளேன். ஏமாந்துவிட்டதாகக் கூறுகின்ற இவர்களைப் பார்த்து நான் ஒரு கேள்வி கேட்கவிரும்புகிறேன். ஏமாறக்கூடியவர்களுக்கு ஆட்சிமன்றத்தில் மீண்டும் என்ன வேலை? ஆட்சிமன்றத்திற்கு மக்கள் தெரிந்தெடுத்து அனுப்புவது சாமானியமானவர்களை அல்ல. அங்கே வருகின்ற சட்டங்களை [illegible] ஆராய்ந்து அதன் தாரதம்மியங்களைப் புரிந்து கொள்ளக்கூடியவர்களைத் தான் ஆட்சிமன்றம் அனுப்பவேண்டும். ஏமாறக்கூடிய [illegible]

## கிளிநொச்சியில் மற்றொரு கொலை

யாழ்ப்பாணம். திங்

கிளிநொச்சித் தொகுதியில் நேற்று ஒரு கொலைச்சம்பவம் நடந்திருப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து, நேற்று யாழ்ப்பாணம் பொலிஸ் கோஷ்டியினர், கிளிநொச்சிக்கு விரைந்துள்ளனர். கோயிலுக்கு அருகில் இக்கொலை நடந்திருப்பதாக கூறப்படுகிறது. கடந்தவாரம் கிளிநொச்சி தொகுதியைச் சேர்ந்த பூனகரியில் ஒரு கார்சாரதி படுகொலை செய்யப்பட்டிருந்தார். இக்கொலைபற்றி பொலிஸார் தொடர்ந்து விசாரணை செய்துவருகின்றனர்.

— —

## நடைபெறவில்லை

யாழ்ப்பாணம், திங்கள்

நேற்று பிற்பகல் மலேரிய [illegible]

## பேராதனைப் பல்கலைக்கழகம் மூடப்பட்டது

பேராதனை, ஞாயிறு

பேராதனைப் பல்கலைக்கழ [illegible] கருதி தொடர்ந்து பொலிஸார் காவல் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைக் குரல் ஒலித்துக் கொண்டுதான் இருக்கும். இதற்காகத்தான் அடையாள அட்டைமசோதாவை நான் ஆட்சிமன்றத்தில் தன்னந்தனியனுக நின்று எதிர்த்தேன். இந்த மசோதா விவாதத்தின்போது நான் நடந்துகொண்டது சரிதானு என்று நீங்கள் சிந்தித்துத் தீர்மானம் எடுக்கவேண்டும்.''

தமிழர் சுயாட்சிக் கழகத் தலைவரும், கழகத்தின் ஊர்காவற்றுறைத் தொகுதி வேட்பாளருமான திரு. வ. நவரத்தினம் புங்குடுதீவு வல்லனில் நடைபெற்ற பகிரங்கக்கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. செ. நடராசா தலைமையில் நடைபெற்ற இக் வேலை? ஆட்சிமன்றத்திற்கு மக்கள் தெரிந்தெடுத்து அனுப்புவது சாமானிய மானவர்களை அல்ல. அங்கே வருகின்ற சட்டங்களை ... ஆராய்ந்து அதன் தாரதம்மியங்களைப் புரிந்து கொள்ளக்கூடியவர்களைத்தான் ஆட்சிமன்றம் அனுப்பவேண்டும். ஏமாறக்கூடியவர்களை அனுப்புவதில் எந்த விதமான பிரயோசனமும் இல்லை நான் அன்று சொன்னதைத் தான் சுமார் நாலரை வருடங்களுக்குப் பின் தமிழரசுக்கட்சியினர் செய்திருக்கிறார்கள்.''

சு. கருணுகரன், செல்வி அ. குமாரகௌரி, புலவர் ஈழத்துச் சிவானந்தன், க. சிவநாமம், பொன்கைவேந்தன் ஆகியோர் உரையாற்றினர்.

வட பகுதிப் பொலிஸ் அதிபருக்குச் சிலர் புகார்செய்துள்ளனர். ஓர் அரசியல் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கூட இந்த நஞ்சுகலந்த செய்திபற்றிச் சிலர் பிரசாரம் செய்வதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது.

யாருக்காவது நஞ்சு கலந்த உணவு கொடுக்கப்பட்டதாகவோ, நஞ்சு கலந்த உணவு கொடுக்க முயற்சி செய்யப்பட்டதாகவோ வட பகுதியில் எந்தத் தொகுதியிலிருந்தும் எவராவது இதுவரை பொலிசில் புகார் செய்யவில்லையென்று வட பகுதிப் பொலிஸ் அதிபர் தெரிவித்தார். ஆனாலும் இந்த நஞ்சுச் செய்திபற்றியும் இந்த வதந்தி பற்றியும் பொலிசார் புலன் விசாரணை மேற்கொண்டுள்ளனர் என்றும் அவர் சொன்னர்.

இம் மாதம் 5-ம் திகதி வட்டக்கச்சியில் நடந்த ஒரு தேர்தற் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொள்ளச் சென்ற குறிப்பிட்ட ஓர் அபேட்சகரின் ஆதரவாளர் சிலர் அந்த அபேட்சகரின் ஆதரவாளர் ஒருவரின் வீட்டில் இடியப்பம் சாப்பிட்டதாகவும் இதைத் தொடர்ந்து சிலர் நோய்வாய்ப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகவும் ஒரு செய்தி வெளிவந்தது. இதே சமயம் இந்த இடியப்பத்தை ஆக்கிய பெண்ணும் மற்றொருவரும் மரணமடைந்ததாகவும் வதந்தி பரப்பப்பட்டு வருகிறதாம்.

ஆனல் பொலிசார் இதுவரை நடத்திய விசாரணைகளிலிருந்து வட்டக்கச்சியைச் சேர்ந்த பாக்கியம் என்னும் பெண்மணி யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் இம்மாதம் 11-ம் திகதியும் முன்னை நாள் போஸ்ட்மாஸ்டர் பற்குணம் என்பவர் இம்மாதம் 9ந் திகதியும் வயிற்றுப்போக்கு நோய் காரணமாக இயற்கை மரணம் அடைந்ததாக தெரியவந்துள்ளது.

நஞ்சுகலந்த உணவு கொடுக்கப் பட்டதாகவோ அதன் காரணமாக யாரும் மாண்டதாகவோ இதுவரை யாரும் பொலிசில் புகார் செய்யவில்லையாம்.

... செய்துவருகின்றனர்.

— —

## நடைபெறவில்லை

யாழ்ப்பாணம், திங்கள்

நேற்று பிற்பகல் மலேயே கபேயில் நடைபெறவிருந்த எஸ். பி. கிருஷ்ணன் எழுதிய சிறுகதை நூல் வெளியீட்டு விழா மழைகாரணமாக நடைபெறவில்லை.

# யாழ். நகரில் மழை: அபேட்சகர்கள் ஓய்வு

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணப் பகுதியில் நேற்று நண்பகல் முதல் பெய்த அடைமழையினுல் தேர்தல்பிரசார வேலைகள் தடைப்பட்டுள்ளன. சுமார் 2மணி நேரம் தொடர்ந்து பெய்த மழையினுல் வீடு வீடாகச்சென்று தேர்தல் பிரசாரம் செய்து வந்தவர்கள் பெரிதும் கஷ்டப்பட்டனர்.

தொடர்ந்து மழைபெய்யுமானுல் யாழ்ப்பாணப்பகுதியில் நடைபெறவிருந்ததேர்தல் பிரசாரக் கூட்டங்கள் ரத்துச்செய்யப்படலாமென சில அபேட்சகர்கள் தெரிவித்தனர்.

மழையுடன் சில பகுதிகளில் காற்றும் இலேசாக வீசியதால் சில இடங்களில் மரங்கள் முறிந்து போக்குவரத்துக்கு தடை ஏற்படுத்தியது.

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் மழைநீர் தேங்கி நின்றதால் பிரயாணிகள் கஷ்டப்பட்டனர். சூறுவளி வேகத்தில் இடைவிடாது தினமும் தேர்தல் பிரசார வேலையில் ஈடுபட்டுவந்த அபேட்சகர்களுக்கு நேற்றுப் பெய்தமழை சற்று ஓய்வைக் கொடுத்தது.

# பேராதனைப் பல்கலைக்கழகம் மூடப்பட்டது

பேராதனை, ஞாயிறு

பேராதனைப் பல்கலைக்கழகம் காலவரையின்றி மூடப்பட்டுள்ளது. மாணவர்கள் வெளியேறிக் கொண்டிருக்கின்றார்கள்.

கடந்த சில தினங்களாக பல்கலைக்கழகத்தில் நிலவி வந்த கலவரநிலை உச்சக்கட்டத்தையடைந்ததைத் தொடர்ந்து துணைவேந்தர் திரு. ஓ. ஈ. பெரேரா பல்கலைக் கழகத்தை இன்று மூடிவிட்டார்.

உடனடியாக மாணவர்கள் பல்கலைக்கழக வட்டாரத்திலிருந்து வெளியேற வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக உடமைகளுக்கும் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு விரிவுரையாளர்கள் வீடுகளுக்கும் பட்டதாரி மாணவர்கள் சேதம் விளைவிக்கலாம் எனக் கருதி தொடர்ந்து பொலிசாரின் காவல் பலப்படுத்தப் பட்டுள்ளது. (சி.பி.ஏ)

# தொழிலாளர் பொலிஸார் மோதல்

கொழும்பு, ஞாயிறு

வெள்ளவத்தை, நெசவுத் தொழிற்சாலை தொழிலாளர்கள் கலவரத்தில் ஈடுபட்டார்கள். இக்கலவரத்தில் கற்களும், போத்தல்களும் பாவிக்கப்பட்டது.

இரவு நேரத்தில் வேலை செய்யும்தொழிலாளர்களுக்கும்தகுந்த சம்பளம் கொடுப்பதுபற்றி நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்கும் இடையில் ஏற்பட்ட பிணக்கின் காரணமாகவே இம் மோதல் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

இக்கலவரச்செய்தி கேட்டதும் ஸ்தலத்திற்கு விரைந்த 200 மேற்பட்ட பொலிஸார் தொழிலாளர் மீது குண்டாந்தடிப்பிரயோகம் செய்ததை தொடர்ந்து பொலிஸாருடன் தொழிலாளர்கள் மோதிக்கொண்டார்கள். இதனுல் தொழிலாளர்களும் பொலிஸாரும் காயமடைந்துள்ளதாக தெரியவருகிறது.

தற்போது தொழிற்சாலையை ஆயுதம்தாங்கிய பொலிஸார் காவல் புரிந்து வருகிருர்கள். (சி.பி.ஏ)

# காரையும் சாரதியையும் பொலிசார் தேடுகின்றனர்

## மாற்றுக்கட்சியினரை தாக்கிப்பேசியதன் எதிரொலி

யாழ்பாணம், திங்கள்

நல்லூர் தொகுதியைச் சேர்ந்த ஓர் அபேட்சகருக்காக பிரசாரம்செய்து வந்த ஒலிபெருக்கிஇணைக்கப்பட்ட கார் ஒன்றையும் அக்கார் சாரதியையும் பொலிசார் தேடிவருகின்றனர். இக்காரில் இணைக்கப்பட்ட ஒலிபெருகி மூலம் மாற்றுக் கட்சியினரை தாக்கிப் பேசியதாகப் புகார்செய்யப்பட்டதைத்தொடர்ந்தே இக்கார் பொலிசாரினுல் தேடப்பட்டு வருகின்றது.

சில தொகுதிகளில் ஒலிபெருக்கிகள் தவருன முறையில் பாவிக்கப்பட்டுவருவதாகவும், ஒலிபெருக்கியில் மாற்றுக்கட்சியினரை தாக்கி பேசியதாகப்பொலிகாருக்கு தகுந்த ஆதாரம் கிடைத்தால் ஒலிபெருக்கி லைசென்ஸ் உடனடியாக ரத்துச் செய்யப்படுமென பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

ஒலிபெருக்கி மூலம் கூட்டம் நடைபெறும் இடம், திகதி, பேச்சாளர்களின் பெயர்கள் மட்டுமே அறிவிக்கப்படலாமென்றும் எதிர்க்கட்சியினரை தாக்கிப்பேசக்கூடாதென்றும் பொலிசார் தெரிவித்தனர்

கையெழுத்தில்லாமல் பிரசுரங்கள் வெளியிடப்பட்டுள்ளதாகவும் பொலிசாருக்குப் புகார் செய்யப்பட்டிருப்பதாகவும் இதுபற்றி விசாரணை செய்யப்பட்டு வருவதாகவும் பொலிசார் மேலும் தெரிவித்தனர். அச்சுக்கூடத்தின் பெயரும் இல்லாத துண்டுப்பிரசுரங்களைப் பொலிசார் கண்காணித்துவருவதாகவும் சில அச்சுக்கூடங்கள் சோதனையிடப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

## கள்ளில் நஞ்சு 9 பேர் பலி

சென்னை மே 17

சேலம் மாவட்டத்தில் கள் அருந்தியபின் 9 பேர் மரணமானுர்கள். கள்ளில் நஞ்சு கலந்திருந்ததாக சந்தேகிக்கப்படுகின்றது. இந்த கள்ளை அருந்திய மேலும் பலர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருக்கின்றுர்கள்.

# 'செந்திநாதையருக்கு நாம் செய்யும் கைம்மாறு'

தாவடி, ஞாயிறு

'இலங்கைப் பல்கலைக்கழகங்களிலே சைவசித்தாந்தத்துக்கென தனித்துறையேற்படுத்துவதே செந்திநாதையர்போன்ற மகான்களுக்குச் நாம் செய்யும் கைமாருகும். நல்லைநகர் ஆறுமுகநாவலர் பெருமான் சைவசமயத்துக்குப் புறத்தே தோற்றிய நோயை நீக்கியவர், சைவசமயத்துள்ளேயிருந்து அதனைப் பீடித்திருந்த நோயை நீக்கிய மகான், சித்தாந்த கலாநிதி காசிவாசி செந்திநாதையர்.

இவ்வாறு கொக்குவில் மேற்கு ஞானபண்டித வித்தியாசாலை மண்டபத்தில் நடந்த, சித்தாந்த கலாநிதி காசிவாசி செந்திநாதையரின் நினைவுவிழாவல் கலந்து உரையாற்றிய வித்துவான் க. கணபதிப்பிள்ளை கூறினுர்.

கொக்குவில் மேற்கு சைவ இளைஞர் சங்கத்தின் ஆதரவில் இவ்விழா நடைபெற்றது. திரு. ம. சர்வானந்தா தலைமை வகித்த இவ் விழாவில் திரு. கணபதிப்பிள்ளைமேலும்பேசுகையில்:-

நாவலர் பெருமான்வளர்த்த சைவசித்தாந்த நெறியை அவர்வழியிலே நின்றுநிலைநாட்டிய பெருமைக்குரியவர் செந்திநாதையர் தமிழ்நாட்டிற்கும் ஈழநாட்டிற்கும் அளப்பரிய சேவைகள் செய்துள்ளார். அடரத்தமாவைத் திரும்பத்திரும்ப அரைப்பது போல ஒரு சிலரின் வரலாறுகளை மாத்திரம் நாம்சிந்திப்பதை விடுத்து நாவலர் வழிவந்த செந்திநாதையர் போன்ற மகான்களுடைய சாதனைகளையும் போதனைகளையும் நினைவுபடுத்துவது எமக்கு அளவற்ற பயன் தரும். அதனுல் கந்தபுராணம் சொல்லும் மேன்மைகொள்சைவநீதிஉலயிகலாம் விளங்கும். எல்லா நலமும் எல்லோர்க்கும் கிடைக்கும்.'

பூசையுடன்ஆரம்பமாகிய இவ்விழாவில், கூட்டுப் பிரார்த்தனை, பக்திப்பாடல்களின் என்பனவும் இடம் பெற்றன.

# வற்ருப்பளை பொங்கல்

முல்லைத்தீவு, திங்கள்

இன்றுநடைபெறும் வற்ருப்பளை அம்மன் கோவில் வருடாந்த பொங்கல் தினத்தன்று இம்முறை மூதன் முதலாக இ. போ. ச. ஊழியர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து வற்ருப்பளை அம்மன் கோவிலடியில் அமைக்கும் பஸ்தரிப்பு நிலையத்தில் 'இலவசகோப்பிக்கடை' அமைத்து அடியார்களுக்கு உதவ முன்வந்துள்ளனர். இதற்கான சகல ஏற்பாடுகளையும் முல்லைத்தீவு இ. போ. ச. டிப்போ மனேஜர் திரு. சொக்கலிங்கமும் ஊழியர்களும் மேற் கொண்டுள்ளனர்.

இலவச கோப்பிக் கடையை வடபிராந்திய இ. போ. ச. முகாமையாளர் திரு. கே. வி. வேலுப்பிள்ளை திறந்து வைப்பார். வீதி ஒழுங்குகளை முல்லைத்தீவு பொலிசாரும் சுகாதார ஒழுங்குகளை சுகாதாரப் பரிசோதகர்களான திருவாளர்கள் பழனித்துரை, மரியநாயகம் ஆகியோரும் மேற்கொண்டுள்ளனர்.

ஐ தே கட்சி

# 'படித்த வாலிபர் வீதியில் அலைய சுதந்திரம் அளித்தது'

இரத்தினபுரி, ஞாயிறு

'ஐக்கியதேசியக் கட்சி எப்பொழுதும் சுதந்திரம்பற்றிக் கூறிக்கொண்டிருக்கிறது. உண்மையில் அது சுதந்திரம் மக்களுக்குக் கொடுத்துத்தான் இருக்கிறது, கடந்த 5 வருடங்களாக படித்த வாலிபரை வேலையின்றி வீதிகளில் திரிவதற்குச் சுதந்திரமளித்துள்ளது. இதுமட்டுமன்றி ஒரு படி அரிசியை வெட்டி மக்களைச் சோறு உண்ணுவதில் இருந்துகாப்பாற்றியுள்ளது.

திரிவனகெட்டியாவில் நடைபெற்ற சுதந்திரக்கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய தோம்பே வேட்பாளர் திரு. பீலிக்ஸ் டயஸ்பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும் தொடர்ந்து பேசுகையில் ஜவுளிப் பங்கீட்டை வெட்டியும் குழந்தைகளின் உணவான பால்மா இறக்குமதியைத் தடுத்தமையும்தான் ஐக்கிய தேசியக்கட்சி தனதுசெல்வச் செழிப்பான ஆட்சிக்காலத்தில் மக்களுக்கு வழங்கிய சுதந்திரமாகும்.

மேலும் ஐக்கிய தேசியக் கட்சிஉணவுற்பத்திப் பெருக்கத்தைப்பற்றிப் பெருமைப் படுகிறது. ஆனுல் ஒரு மண்வெட்டியை ஒரு விவசாயி 18 ரூபாய்கொடுத்து வாங்க வேண்டியிருக்கும் பொழுது எவ்வாறு விவசாயி உணவு உற்பத்திப் பெருக்கத்தால் நன்மையடைந்தான் என்று கூறமுடியும் ஐக்கியதேசியக் கட்சியினர் தங்கள் தேவைகளுக்கு மதிப்புள்ளவாகனங்களை வரி ஒன்றுமின்றி வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்தார்கள். ஆனுல் ஏழை மக்களிடம் ஈவுஇரக்கமின்றி கடும் வரியைச் சுமத்தினுர்கள்.

சோஷலிச அரசாங்கமே ஏழைமக்களுக்கு நல்வாழ்வளிக்கவல்லது. இம்மாதம் 27-ம் திகதி திருமதி பண்டாரநாயக்காவின் தலைமையின் கீழ் சோஷலிச அரசாங்கம் அமைக்கப்படும்' எனக் கூறினுர்.

பெல்மதுளை முன்னுள் ஆட்சிமன்ற அங்கத்தவர் திரு. தர்மதாச, திரிவனகெட்டியா கூட்டணி வேட்பாளர் திரு. நந்தா எலவல உட்படப் பலர் உரையாற்றினர்.

## இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், திங்கள்

வெளிமாணவருக்கான பாமஸிஸ்ற் வகுப்புகள் இன்று மாலை யாழ்ப்பாணம் மலேயாகபே மேல்மாடியில் நடைபெறுகின்றன.

இலங்கையில்

# ஜனநாயகம் பிழைத்திருப்பதற்கு அரசாங்க ஊழியரே காரணம்

**- யாழ் அரசாங்க அதிபர்**

யாழ்ப்பாணம், திங்கள்

"உலகில் பல நாடுகளிலும் ஜனநாயக அமைப்புத் தோல்வியடைந்துள்ளது. குறிப்பாகத் தென்கிழக்காசியாவில் பல நாடுகளிலும் ஜனநாயகம் தோல்வியடைந்துள்ளது. ஆனுல் இலங்கையில் மட்டும் தான் இன்று ஜனநாயக அரசியல் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதற்குக் காரணம் இங்கு அரசாங்க ஊழியர்கள் நேர்மையாகவும் திறமையாகவும் தங்கள் கடமையைச் செய்துவருவதும் அரசாங்கசேவைபாரபட்சமின்றிச் செயல்பட்டு வருவதுமேயாகும்.''

இவ்வாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. பிரான்சிஸ் பீடரிஸ் நேற்று யாழ்ப்பாணம் வீரசிங்க மண்டபத்தில் தேர்தல் அதிகாரிகள் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

சுமார் 800 அரசாங்க ஊழியர்கள் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் தேர்தலில் அரசாங்க ஊழியர்கள் எவ்வாறு தங்கள் கடமைகளைப் பாரபட்சமின்றி செய்யவேண்டுமென்பதுபற்றி அவர் விளக்கிக் கூறினுர். சில ஊழியர்கள் கேட்ட சந்தேகங்களுக்கும் அவர் விளக்கம் கூறினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேட்பாளர் அறிமுகம்

## பட்டிருப்பு



எஸ், எம். இராசமாணிக்கம் (தமிழரசுக்கட்சி)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக இன்று விளங்கும் திரு. எஸ்' எம். இராசமாணிக்கம் கிழக்கு மாகாணத்தில் கட்சியின் வளர்ச்சிக்குக் காரணமான தலைவர்களுள் ஒருவர்.

கிழக்கு மாகாணத்தில் மண்டூரைத் தாயகமாகக் கொண்டவர் இவர். கட்சி நடாத்திய போராட்ட இயக்கங்களில் முன்னணியில் நின்று செயலாற்றிய பெருமை பெற்றவர்.

கட்சியினரின் அன்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமான திரு இராசமாணிக்கம் அதன் தலைவராக மூன்றாவது தடவையும் தெரிவு செய்யப்பட்டவர்'

கூட்டுறவுத்துறையில் ஈடுபாடுமிகவுடைய இவர் உள்ளூராட்சி மன்ற அரசியலிலும் மிக்க ஈடுபாடுடையவராகத் தொண்டாற்றி மக்களின் செல்வாக்கைப் பெற்றவர்.

முதன்முதலாக 1947-ம் ஆண்டு நடைபெற்ற ஆட்சி மன்றத் தேர்தலில் இவர் போட்டியிட்டு தோல்வியடைந்தவர். ஆயினும் 1952-ம் ஆண்டுத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றியீட்டினார். ஐக்கியதேசியக்கட்சியில் இக்காலத்தில் செயல்பட்டுக்கொண்டிருந்த திரு இராசமாணிக்கம் ஐக்கியதேசியக்கட்சியினர்களனி மகாநாட்டில் சிங்களம் மட்டுமே என்ற தீர்மானத்தைஎடுத்தபோது அக் கட்சியிலிருந்து விலகினார்,

இதன் பின்னரே இவர் தமிழரசுக்கட்சியில்இணைந்து கொண்டார்.

தமிழரசுக் கட்சியினர் நடாத்திய கச்சேரி மறியல் போராட்டம் இவர் தலைமைதாங்கிய காலமாகிய 1961-ம் ஆண்டுதான் நடைபெற்றது. இப் போராட்டத்தில் தனதுபணியைச் சரிவரச் செய்தார். பட்டதாரியான இவர் தமிழ்ப் பண்பாடும் கலை கலாச்சாரத்தில் மிக்க ஈடுபாடும் உடையவர். பதுளையில் காணி அதிகாரியாகவும் கடமையாற்றியுள்ளார்.

0 0 0

எஸ், யூ. தம்பிராஜா (ஐ. தே. க)

முன்னாள் ஆட்சிமன்றத்திதே பிரதிநிதியாக விளங்கிய திரு எஸ். யூ. எதிர்மன்னசிங்கத்தின் சகோதரரே எஸ். யூ. தம்பிராஜா.

ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளராகப் போட்டியிடும் திரு தம்பிராஜா மட்டக்களப்பு மெதடிஸ்த கல்லூரியின் பழைய மாணவர் இவர்.

கூட்டுறவு இலாகாவில் பரிசோதகராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். சமூகப் பணிகளில் முன்னின்று உழைப்பவர். கலை, கலாச்சாரத் துறைகளில் கருத்துடையர்.

முதற்தடவையாக இப்போதுதான் பேட்டியிடுகின்றார். முன்னாளில் எருவில் பேரதீவுப்பகுதிகளின் உடையாராகக் கடமையாற்றிய காலஞ்சென்ற திரு சோமசுந்தரம் உடையாரின் கனிஷ்ட புதல்வர் இவர்.

## "தமிழ்மக்களின் ஒரே ஆயுதம் தமிழரசுக்கட்சிதான்"

சித்தன்கேணி, ஞாயிறு

"கல்வி மந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை தமிழ்பேசும் பிள்ளைகளுக்குச் சிங்களத்தைப் போதனாமொழியாக்குவதற்கான ஒரு திட்டத்தை ஆட்சிமன்றத்தில் கொண்டுவந்து செயல்படுத்த முனைந்தபோது. தமிழரசுக் கட்சியினர் தெரிவித்தகடும் எதிர்ப்புக் காரணமாகவே போதனாமொழி விஷயத்தைச்சிறிது காலம் ஒத்திவைத்துள்ளார்.



இத்தகைய அநீதியானதும், தமிழினத்தையே இலங்கையில் இல்லாது பூண்டோடு அழிக்கக்கூடியதுமான இத்திட்டம் ஒருபோதும் அமுலாக்கப்படாதிருப்பதற்கான வழி, தமிழ் மக்கள் தமிழரசுக்கட்சியை பெரும் பலத்துடன் ஆட்சிமன்றத்திற்கு அனுப்புவதே."

இவ்வாறு தமிழரசுக் கட்சித் தலைவரும் காங்கேசன்துறைத்தொகுதி தமிழரசுக் கட்சி வேட்பாளருமான திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் சங்கானை கிழக்கிலுள்ள பிரான்பற்று என்னுமிடத்தில் வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழரசுக்கட்சி வேட்பாளர் திரு. அ. அமிர்தலிங்கத்தை ஆதரித்து நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

திரு. க. நவரத்தினராசா தலைமையில் பிரான்பற்று பெரியவளவு முருகமூர்த்தி கோவிலுக்கு அருகாமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது:

"சிங்களம் போதிப்பதற்குச் சிங்கள ஆசிரியர்களைத் தமிழ்ப்பகுதிகளுக்கு அனுப்புவதன் மூலமும், வடக்கு, கிழக்கில் திட்டமிட்டுச் சிங்களக் குடியேற்றங்களைச் செய்வதன் மூலமும், நமது பிரதேசங்களைச் சிங்கள மயமாக்க சிங்கள ஆட்சியினர் முனைகின்றனர். இத்தகைய திட்டமிட்டு நடைபெறும் செயல்களைத் தடுப்பதற்குத் தமிழ்மக்களுக்கு உள்ள ஒரேயொரு ஆயுதம் தமிழரசுக் கட்சிதான். தமிழினம் தன் மானத்துடன் இலங்கையில் வாழ தமிழரசுக்கட்சிப்பிரதிநிதிகளைப் பெரும்பான்மையாக ஆட்சிமன்றம் அனுப்ப வேண்டும்"

கோப்பாய்த் தொகுதித் தமிழரசுக்கட்சி வேட்பாளர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை பேசுகையில், "தமிழினத்தின் விதியை நிர்ணயிக்கும் காலகட்டத்தில் இத்தேர்தல் நடைபெறுகின்றது. எமது உரிமைகளுக்கு எக்க சிகடமை கண்ணியம், கட்டுப்பாட்டுடன் செயலாற்றி வருகிறதென்பதை உணர்ந்து மககள் வாக்களிக்கவேண்டும் தமிழ்காங்கிரஸ்கட்சி ஒன்றரை மந்திரிப்பதவிகளை 1948ல் பெற்றதன் மூலம் தமிழர்களின் கிழக்குப் பிரதேசங்களை இழந்ததுடன் அம்பாறை போன்ற தமிழ்த் தொகுதியில் ஒரு சிங்கள மகனைப் பிரதிநிதியாவதற்கு வழிசெய்தது, அத்துடன் அல்லை, கந்தளாய், திருக்கோணமலை போன்ற பகுதிகளில் சிங்கள மக்களை குடியேற்றி தமிழினத்தை அழிக்கும் செயலுக்கும் வழிவகுத்தது. அத்துடன் தோட்டத் தொழிலாளரின் வாக்குரிமையைப் பறிக்க சிங்கள அரசுக்கு உதவி. அவர்களை நாடு கடத்துவதற்கு வழிவகுத்தது. 1965ல் டட்லி சேனநாயக்கா நமது உரிமைகளை வழங்குவதென வாக்குறுதி

## '2 வருடங்களில் உரிமை இல்லையேல்ராஜினமா'

கோப்பாய், ஞாயிறு

"தமிழ்மக்களது இழந்த உரிமைகளை மீண்டும் பெறுவதற்கு முதலில் தேவையானது ஒற்றுமை மேடைக்கு மேடை ஒருவரை ஒருவர் திட்டியோ தூஷித்தோ ஆட்சிமன்றம் செல்வதால் உரிமைகள் கிடைத்து விட முடியாது தமிழனைத் தமிழன் திட்டுவது முதலில் நீங்கி ஒற்றுமைக்கு வழிகோலப் படவேண்டும்"

இருபாலை கிழக்கில் நடைபெற்ற தமிழ்க் காங்கிரஸ் தேர்தற் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கோப்பாய் தொகுதி வேட்பாளர் திரு. ரி. குணரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. குணரத்தினம்தொடர்ந்து பேசுகையில், "இலங்கையில் வாழும் நிரந்தர பெரும்பான்மையினரான சிங்கள இனத்துடன் நிரந்தர சிறுபான்மையினரான தமிழினம் அன்புடனும் ஐக்கியத்துடனும் நடந்தாலே உரிமைகள் கிடைக்கமுடியும் இன்று சமஷ்டிச்குரல் எழுப்பும் தமிழரசுக்கட்சியின் காலஞ்சென்ற தலைவர் திரு. வன்னியசிங்கமே சமஷ்டி ஒருபோதும் இலங்கையில் ஏற்படமுடியாதென்பதை 56 ல் ஒப்புக்கொண்டுள்ளார் எனவே அவர்களின் சமஷ்டிக் கோரிக்கை காலங்கடந்தது மட்டுமன்று அந்நாட்டுப் பொருளாதார வளத்துக்குப் பொருந்தாவதுமாகும். ஆகமேதான் சேர். பொன். இராமநாதன் அருணசலம் போன்றோர் சமஷ்டிக் கோரிக்கை விடுக்கவில்லை. எனவே சமஷ்டி அரசியலமைப்பு இந்நாட்டில் ஏற்பட மாட்டாது" என்றார்.

கோப்பாய் கிராமசபைத் தலைவர் திரு. பரமானந்தராசா தலைமைவகித்துப் பேசுகையில். தமிழரசுக் கட்சியினர் அற்பசலுகைகளுக்காக சிங்கள அரசியற் கட்சிகளுக்கு மாறிமாறி ஒத்துழைப்புக் கொடுப்பதன் மூலம் அரசியல்விபசாரிகளாகமாறிவிட்டதாகவும், இந்நாட்டில் அன்றும் இன்றும் என்றும் ஒரேவிதமான லட்சியம். கொள்கைகளுடன் இயங்கிவருவது தமிழ்க் காங்கிரஸ் கட்சிஒன்றே என்றும்வரும் தேர்தலில் எமது அபேட்சகர்களை ஏகோபித்தமுறையில் ஆட்சிமன்றத்துக்கனுப்பினால் அவர்கள் 2 வருடகாலங்களுள் உரிமைகள் பெற்றுத்தருவது உறுதியென்றும், அன்றேல் ராஜினமாச் செய்வது நிச்சயம் என்றும் சொன்னார்.

திரு. வைரவநாதன், ஜீவரத்தினம் உட்பட பலர் பேசினர்.

கிரிக்கெட்

## இறுதியாட்டம் யாழ் நகரில்

யாழ்ப்பாணம், திங்கள்

இலங்கை மாகாணப் பாடசாலைகள் தெரிவுக்கிரிக்கெட் கோஷ்டிகளிடையே நடைபெற்ற 20 வயதுக்குட்பட்டவர்கள் கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டம் இம் மாதம் 18, 19-ம் திகதிகளில் யாழ். மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கின்றது.

இப்போட்டி மேற்குறிப்பிட்ட திகதிகளில்கொழும்பு சென். ஜோசப் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருந்தது. ஆனல் கொழும்பில் தொடர்ந்து மழைபெய்வதினல் தான் இப்போட்டி இம்முறையாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்றது.

இந்த இறுதிப்போட்டியில்

## விசேஷ பஸ் சேவை

யாழ்ப்பாணம், திங்கள்

கொடிகாமம் - கச்சாய் அம்மன்கோயில் வருடாந்த பொங்கல் உற்சவம் இன்று ஆரம்பமாகும். பொங்கல், வேள்வி பூசை ஆகியவிசேஷ நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

கச்சாய் அம்மன் கோயிலுக்கும், முல்லைத்தீவுவற்றுப்பளை அம்மன்கோயிலுக்கும் தென் யாழ். பஸ் பிரயாணிகள் சங்கத்தலைவரின் வேண்டுதலுக்கிணங்க பிரத்தியேக பஸ் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

## பொங்கல் விழா

யாழ்ப்பாணம், திங்கள்

சண்டிலிப்பாய் நாச்சிமார் கோவில் வருடாந்த பொங்கல் உற்சவம் ஆரம்பித்துள்ளது. இன்று 6-வது அபிஷேக தினமாகும். இம் மாதம் 20-ம் திகதி விழா பூர்த்தியாகும். விசேஷ அபிஷேகமும் பூசையும் நடைபெறும்.


வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30,10-00


### தேவை

நிர்வாக காரியதரிசி

கரவெட்டி, கட்டைவேலிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாசத்துக்கு நிர்வாகக்காரியதரிசிஒருவர் தேவை. சொந்தக் கையெழுத்தில் எழுதப்பட்ட விண்ணப்பங்கள், சமாசத் தலைவருக்கு 29-5-70க்குப் பிந்தாமல் பதிவுத் தபாலில் அனுப்பப்படவேண்டும்.

தகுதி: (I) கணக்கியலிற் தேர்ச்சியுள்ள பட்டதாரி அல்லது

(II) கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் (உயர்தர) பெற்றவர் குறைந்தது 10 வருட அனுபவமுள்ளவராயிருத்தல் வேண்டும். அல்லது

(III) 10 வருட அனுபவமுள்ள கூட்டுறவுப்பரிசோதகர்.

வயது: 1-5-70இல் 25 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருக்கவேண்டும்.

பிணை:- ரொக்கம் 2000/- ஆதனம் 3000/-

சம்பளம்:- ரூபா 3300 — 10 X 180 — 5100.

அண்மையிற் பெற்ற நன்னடக்கைப் பத்திரப் பிரதி இரண்டும், தராதரப்பத்திரப் பிரதியும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்படவேண்டும். 2269

### கல்வி

ஆசிரிய கலாசாலைப் பிரவேசம், சுருக்கெழுத்து, தட்டச்சு, கணக்கியல் வகுப்புகளுக்கு பிரவேசங்கள் ஏற்கப்படுகின்றன. யூனைட்டெட் மகளிர் கல்லூரி, நெல்லியடி, கரவெட்டி. 2242

பாடசாலைகளில் பயிலும் ஜி. சி. ஈ. மாணவ மாணவிகட்கும் மற்றும் தனிப்பட்டவர்க்கும் விசேஷ எண் கணிதம், தூயகணிதம், வர்த்தக கணிதம் கணக்குப் பதிவியல், கலை/விஞ்ஞான வகுப்புகள் காலை/மாலையில் கற்பிக்கப்படும், சிங்கள வகுப்புக்களும் சிங்கள ஆசிரியர்களால் நடாத்தப்படுகின்றன. விபரங்களுக்கு ஸ்ரீ விக்னேஸ்வரவித்தியாலயம், 1, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம். 2239

ஜீ. சீ. ஈ. சாதாரணம்) கலை, விஞ்ஞானம் (உயர்தரம்) கலை, ஆசிரிய கலாசாலைப் பிரவேசம், சுருக்கெழுத்து தட்டச்சு, கணக்கியல், வர்த்தகம், பகல், மாலை வகுப்புகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். பெண்களுக்குத் தனி விடுதி. யூனைட்டெட் அக்கடமி, நெல்லியடி, கரவெட்டி. 2233

### விற்பனைக்கு

நல்ல நிலைமையிலுள்ள அச்சகம் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: V. வேலாயுதபிள்ளை, நுணுவில் மேற்கு, சாவகச்சேரி. 2245

இல L 1668 கோட் தீர்வைப்படி கல்வியங்காடு இராசா வீதியில் பூபாலசிங்கம் J. P. வீட்டிற்கு எதிரில் 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும் ப. விக்கிரமராசசிங்கம், மீசாலை தெற்கு. செ. செல்வரத்தினம், நீர்வேலி 6 கட்டை. 2236


REGAL JAFFNA
Daily 4 Shows
Yul Brynner,
Trevor Howard
in
THE LONG DUEL
(Panavision-colour)

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7&9-45 p.m.
Poya&Public Holidays
4 shows
Nigel Green,
George Kennedy
in
PINK JUNGLE
(Scope-coluor)

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஷம்மிகபூர்
ராஜ்ஸ்ரீ
நடித்த
பிரமச்சாரி

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
6வது வாரம்
சிவாஜி, கே ஆர் விஜயா
நடித்த
திருடன்

நீங்கள் வீடு கட்டும் பொழுது


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நீங்கள் வீடு கட்டும் பொழுது

# ஒட்டுப் பலகை கதவுகளை பாவித்து



விலையை 40% குறைக்கவும்

விலை ரூபா 60/- தொடக்கம் ரூபா 156/- வரையாகும்.

☐ ஒட்டுப் பலகை கதவுகள் பிரமீ குன்றநதனை, நீண்ட காலம் பாவிக்கக் கூடியவை. எழில் மிக்கவை. இலகுவில் பொருத்த கூடியவை. புல்ரக மரங்களில் தேர்ந்தெடுத்து உற்பத்தி செய்யப்பட்டவை. கிரிகம்பலிகை, கூலன்கிக், சற்றின் ஆகிய ஆடம்பர ரகங்களிலும் சாதாரண ரகங்களிலும் கிடைக்கும்.

☐ கதவுகள் பின் குறிப்பிட்ட அளவுகளில் விநியோகிக்கப்படும்:

உயரம் : 6' 9''
அகலம் : 2' 3'', 2' 9'', 3' 6''
கனம் : 1¼''

☐ விட்டத்திற்கு உபயோகிக்கப்படுகிற மரம் நீண்டகால உழைப்பிற்காக சிறந்த முறையில் பதப்படுத்தப்பட்டவையாகும்.

உற்பத்திக்கு உபயோகிக்கப்பட்ட பசை ஈரத் தன்மையை எதிர்க்கும் வன்மையுடையது.

**இக்கதவுகள் பாவனையாளருக்கு உடனடியாக விற்பனைக்கு கிடைக்கும்.**

இலங்கை
ஒட்டுப்பலகை கூட்டுத்தாபனம்
நிர்: 18, பலாலி வீதிச் சந்தி,
ஆரியகுளம், யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 508.

இலங்கை
ஒட்டுப்பலகை கூட்டுத்தாபனம்
420, பௌத்தலோக மாவத்தை
கொழும்பு 7.
தொலைபேசி: 95846, 92903

HUNDEPP

யைப் பறிக்க சிங்கள அரசுக்கு உதவி. அவர்களை நாடு கடத்துவதற்கு வழிவகுத்தது. 1965ல் டட்லி சேனநாயக்கா நமது உரிமைகளை வழங்குவதென வாக்குறுதியளித்ததாலேயே தமிழரசுக் கட்சி அரசாங்கம் அமைக்க ஆதரவு கொடுத்தது'' என்றார்.

திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் பேசுகையில், ''1948 முதல் 1956 வரை தமிழ்க்காங்கிரஸ் கட்சியை தெரிந்தெடுத்த மக்கள் அக்கட்சி தமிழர்களின் விடுதலைக்கு உழைக்கமாட்டாதென கருதியே தமிழரசுக் கட்சியை 1956 முதல் பெரும்பான்மையாக ஆட்சி மன்றம் அனுப்பி உரிமை

யைதானதில் நடைபெற விருந்தது. ஆனால் கொழும்பில் தொடர்ந்து மழைபெய்வதினால் தான் இப்போட்டி இம்முறையாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்றது.

இந்த இறுதிப்போட்டியில் வடமாகாணத்தெரிவுக்கிரிக்கெட்கோஷ்டியும்கொழும்பு வடக்கு தெரிவுக் கிரிக்கெட் கோஷ்டியும் மோதிக்கொள்ளவிருக்கின்றது. (தே. நி.)

களை பெற்றிருக்கின்றனர்'' என்றார்.

உடுவில் கிராமசபைத் தலைவர் திரு. எஸ். முத்துலிங்கம், வழககறிஞர் திருநாவுக்கரசு. வேட்பாளர் திரு அ. அமிர்தலிங்கம், செல்வி குணு நடராசா. திரு. சர்மா ஆகியோரும் பேசினர்.

ஷேகமும் பூசையும் நடைபெறும்.

## வெஸ்லிசினிமா

மானிப்பாய்
தினசரி: 6-30, 10-00
பிரிபோயா, போயா 2-30 மணி
ரங்கராவ் - மாஸ்டர் பிரபாகன்
நடித்த

## பக்த பிரகலதா

## ஸ்ரீ காலிங்கன்

இணுவில்
தினசரி 6-30-10-00 மணி
போயா, பிரிபோயா 2-30
எம். ஜி. ஆர் - அஞ்சலிதேவி
நடித்த

## சக்கரவர்த்தித் திருமகள்

தினசரி 3 காட்சிகள்
நடித்த

## திருடன்

வின்ஸர் 6 வது வாரம்
யாழ்ப்பாணம்
தினசரி பி. ப. 2-30 6-30
சிவாஜிகணேசன் — பாரதி
மற்றும் பலர் நடித்த

## தங்கச் சுரங்கம்

(முழுநீள ஈஸ்ட்மன் கலர் சித்திரம்)

தினசரி: காலை 10-30 இரவு 9-45
ரி. ஆர். ராமச்சந்திரன் — தங்கவேலு
அஞ்சலிதேவி — கருணாநிதி
நடித்த

## அடுத்தவீட்டுப் பெண்

இன்று மட்டும்

வெலிங்டன் யாழ்ப்பாணம்

தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)

## சர்வாதிகாரி

மக்கள் பாராட்டிய சித்திரம்!
பத்திரிகைகள் போற்றிய சித்திரம்!
காலத்திற்கேற்ற கருத்தோவியம்!

நாளை முதல்!

வெலிங்டன் யாழ்ப்பாணம்




இஸ்லாமிய அன்பர்கள் அனைவருக்கும் எமது

## மீலாத் வாழ்த்துக்கள்!

நாற்பது ஆண்டுகளில் உயர்ந்தது! நாடெங்கும் பிரசித்திபெற்றது!

# மில்க்வைற் தயாரிப்புகள்!

காலம் பெறுமதியானது மில்க் வைற் சலவை துரிதமானது
நாகரீக வேகத்திற்கு நல்லதோர் வரப்பிரசாதம்

## மில்க் வைற்

★ மில்க் வைற் நீல சோப் ★ மில்க் வைற் பார் சோப்
★ மில்க் வைற் சலவைப் பவுடர்

மேலுறைகளுக்கு விசேஷ பொருள்கள் இனாம்

இன்றே திரட்டுக! நாட்டுக பெரும் பொருள்!

50 மில்க் வைற் நீல சோப் உறைகளுக்கு
ஒரு பொலித்தீன் பாக் அல்லது ஒரு பல வர்ணப்படம் அல்லது ஒரு சாக்கு பாக்
100 மில்க் வைற் நீல சோப் உறைகளுக்கு
ஒரு கூப்பன் பாதுகாப்புப் பிளாஸ்ரிக் கவர்
300க்கு மேற்பட்ட உறைகளுக்கு
அழகிய துவாய் ஒன்று
10 மில்க் வைற் பார் சோப் உறைகளுக்கு
ஒரு கூப்பன் பாதுகாப்புப் பிளாஸ்ரிக் கவர்
10 மில்க் வைற் சலவைப் பவுடர் உறைகளுக்கு
ஒரு கீப்பேர்ஸ் (திறப்புக் கோர்ப்பது)
10 மில்க் வைற் நீல சோப் உறைகளுக்கு
ஒரு ''யோகக்கலை'' புத்தகம்

மேற் குறிப்பிட்டபடி மில்க் வைற் தயாரிப்புகளின் மேலுறைகளை மில்க் வைற் வியாபார வான்களில் அல்லது மில்க் வைற் தொழிற்சாலைக் காரியாலயத்தில் கொடுத்து அல்லது தபாலில் அனுப்பி

இலவசபொருள்களை பெற்றுக்கொள்ளுங்கள்

தந்தி: 'மில்க் வைற்' தொலைபேசி: 7233

# மில்க் வைற் சோப் தொழிற்சாலை

காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
கிளை: மில்க் வைற் டிப்போ 83, ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு-13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீலாத் சிறப்பிதழ்

# அகிலத்துக்கோர் அருட் ஜோதி

# அண்ணல் நபி [ஸல்] யின் அருட் சாதனை

''வமா அறுசல்னுக்க இல்லா றஃமதல் லில் ஆலமீன்'' உலக மக்களுக்கு உம்மை ஓர் அருட் கொடையாக அல்லாமல் நாம் அனுப்பவில்லை என்பது திருமறையின் கூற்றாகும். இக்கூற்றுக்கு இலக்கணமாய் அமைந்து அரிய பலபோதனைகளை மக்கள் மத்தியிலே சர்க்கரைப் பந்தலிற்றேன் மாரிபோன்று அழகொழுக எடுத்தோதியும். அஹிம்சா மூர்த்தியாகிக்கல்லடியுஞ் சொல்லடியும் இதயத்துடிப்பை ஈர்த்தபோதும். கண்துஞ் சாதுகர்ம வீரராய் நின்று சாதனையில் வெற்றிகண்ட பெருமை பெருமானாரையே சேருமென்று கூறினால் அக்கூற்று இன்றைய முஸ்லிம்களின் இதயத்தைத் தொட்டழுத்தாமல் இருக்கமுடியாதென்று துணிந்து கூறலாம்.

நாம்பெருமானார் வாழ்ந்த காலத்தையும் இடத்தையும் நமது மனக்கண்முன் வைத்துக்கொண்டால் உத்தமநபி நம்பியவர்களின் வீரதீரச் சாதனைகளைப்பற்றியறிவதில் ஆச்சரியமும் அவாவும் அடைவதோடு அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றவும் செயல்படவும் ஒருசிறிதும் தயங்கமாட்டோம். சரியாகப் புரிந்துகொள்ளாத காரணத்தால் வாழவேண்டிய சிறப்பியல்புகளை மறந்து கடமைகளை உதாசீனஞ் செய்து உலகை ஒரு நித்தியமாக நினைத்து நிலைத்து வாழத்துடிக்கின்றான் இன்றைய மனிதன்.

கி. பி. 6-ம் நூற்றாண்டுக்கு நாம் செல்வோம் அராபியப் பிராந்தியத்தையும் நமது மனக்கண்முன் கொண்டு வருவோம். மணல் வனாந்தரம். எங்கும் ஒரே அஞ்ஞான அந்தகாரமும் மௌட்டீகமுமே அராபியரின் வாழ்க்கையிலே நம்கண்ணுக்குத் தென்படுகின்றன. மதுவும் மங்கையும் பஞ்சமாபாதகங்களுமே அவ்வராபிய மக்களின் கலைக்கூடமாக விளங்கிய காலமது. நாளுக்கொருகல்லாக 360 கற்களைத் தமது மூடக்கொள்கைகளுக்கேற்பவேண்டி நின்றகாலம் சமைப்பதற்கு 3 கற்களை எடுக்கும்போது நாலாவது கல்லொன்றைத் தெய்வமாக மதித்து எடுத்துக்கொண்டு அதற்குத் தலை வணங்குவார்கள் என்றால் அவர்களின் அஞ்ஞான இருள் எந்த அளவுக்குத் தலைவிரித்துத்தாண்டவம் ஆடியதென்பதை நாம் இலகுவாக அறிந்து கொள்ளலாம். சுருங்கக் கூறின் ஐந்துவேளை மது அருந்துவதும் மங்கையரோடு ஆடிப்பாடி அலங்கோலப் படுவதும் அடிமைகளை வைத்து ஆடுமாடுகளிலும் கேவலமாக நடத்திச் சந்தைகளில் விற்றுப்பணம் பெறுவதுமே அவர்களின் வாழ்க்கையாக அமைந்திருந்ததெனலாம் பெருமானாரின் பெருமுயற்சியின் மூலம் உச்சநிலை பெற்றனர்

எபபோதும் உண்மையும் பொறுமையுமுடையவனாய் வாழப் பழகிக்கொள்ள வேண்டும். தன்னைப்போன்று பிறரையும்நேசிக்கவும் அவர்களது துயர்கண்டு மனமிரங்கி எம்மாலான உபகாரங்களைச் செய்துவருதலும் வேண்டும். நாம் அல்லாஹ்வைப் பார்க்க முடியாவிடினும் அல்லாஹ் நம்மைப் பார்த்துக்கொண்டே இருக்கிறார் என்ற அச்சம் நம்மிடை எப்போதும் இருக்க வேண்டும் இவ்வாறு வாழத் தலைப்படும்போது நாம் இழந்த செல்வங்கள் யாவும் பெற்று சமாதான வாழ்க்கையும் சாந்தியும் பெறுவோம். இந்த இலட்சியப் பாதையில் வீறுநடை போட பெருமானாரின் ஜயந்திதினத்தில் ஒரு விசுவாசப் பிரமாணஞ் செய்து கொள்வோமாக

''அஸ்ஸலாமு அலைக்கும்''

## எம். ஏச். எம். அப்துற்றஸ்ஸக்

### இன்றைய முஸ்லிம்களின் நிலை

இன்றைய முஸ்லிம்களின் நிலையை அவதானிக்கும் போது முன்னைய நிலையைக் குறித்து ஆச்சரியப்படுவதற்கு எதுவுமேயில்லை. அக்கால ஞான தீட்சண்ணியத்திற்கும் இக்காலத்தில் உண்டான அறிவு வளர்ச்சிக்கும் பெரும் மாறுதல் ஏற்பட்டுள்ளதென்பது வெளிப்படை எனினும் மனிதன் கண்பார்வையில் மனிதனைப் போன்று தென்படின் பண்புகளை நோக்கும்போது விலங்கினுங் கொடியனாய் வாழ்கின்றான் என்பது உள்ளூரப் புலனாகும். எவை மனிதனுக்கு ஆகாதவையோ அவை தலைமேற்

### அமுத வாக்கு

ஒருவன் தனது மக்கட்கு உயரிய நல்லொழுக்கத்தை கற்பித்துக் கொடுப்பதானது ஒரு மரக்கால் தானியத்தை தருமம் செய்வதைவிட மிக மேலானதாகும்.

0 0 0

பூமியின் பல கோணங்களிலும் விரைந்து உங்களது இரணத்தை முழுமுயற்சிசெய்து தேடுங்கள்.

0 0 0

எவரிடமும் உங்களது தேவைகளை மறைமுகமாகக் கூறுங்கள். ஏனெனில் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு பொறாமையாளன் இருக்கிறான்.

0 0 0

பொய் பேசல். வாக்கை நிறைவேற்றாமல் இருத்தல், அமானிதத்தை மோசடி செய்தல் ஆகிய இம்மூன்று சின்னங்களும் (முனபிக்) கள்ள விசுவாசிகளின் சின்னங்களாகும்.

(8ம் கலத் தொடர்ச்சி)

# உறுதி

உஹத் யுத்த களத்திலே ஆள்மாறாட்டம் ஒன்று நடந்துவிட்டது. முஸ் அபு என்னும் நாயகத் தோழர் நபி பெருமானாரின் சாயல் பெற்றவர். போர்க்களத்தில் அவரே முஸ்லிம்களின் கொடியைத் தாங்கிநின்றார்: தோழர் முஸ் அபுவை, எதிரிப் படைகளுள் சிறந்த குதிரை வீரனான இப்னு கம்யா என்பவன் கொன்று 'முஹம்மதைக் கொன்றுவிட்டேன்; முஹம்மதைக் கொன்றுவிட்டேன்!' என்று ஆர்ப்பரித்தான்.

உண்மையை அறியாத விசுவாசிகளின் மத்தியில் இச்செய்தி மனக் குழப்பத்தையும் கலக்கத்தையும் ஏற்படுத்தியது.

'பெருமானார் இறந்துவிட்டார்கள்' என்ற செய்தி காட்டுத்தீபோல் மதீனா எங்கும் பரவியது.

'இறுதி இறை தூதராம் நபி நாயகம் (ஸல்) அவர்கள் இறந்துவிட்டார்களா?' என்ற வினாவே ஒவ்வொருவர் உள்ளத்திலும் எழுந்து நின்றது!

'இது வெறும் வதந்தியாகவே இருத்தல்வேண்டும்; உண்மைச் செய்தியாக மாறக்கூடாது' என்று மனமுருகப் பலர் வேண்டிக் கொண்டனர். அதேசமயம் உண்மையை அறிந்துவிடல் வேண்டுமென்ற ஆவல் உந்த ஆண்களும் பெண்களுமாகப் பலர் உஹத் போர்க்களத்தை நோக்கி விரைந்தனர்.

இவ்வாறு உஹத் போர்க்களம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த பெண்கள் கூட்டத்தில் ஒரு மாதுசிரோமணியும் இருந்தார். அவர் திருமதீனமா நகரைச் சேர்ந்தவர். பனீர் அம்பார் குலத்தவர் உஹத் போரின் வெற்றிக்காக அவருடைய தந்தை, கணவன், மகன், சகோதரன் ஆகிய உறவினர்களும் ஆயுதமேந்திப் பங்கு பற்றினர், உறவினர்களுக்கு என்ன நேர்ந்ததென்பதைப் பற்றிக்கூட அவர் எண்ணிப் பார்த்தாரல்லர். 'பெருமானார் ஷஹீத் (வீரமரணம்)

மணியை அடையாளங் கண்டு, 'உங்களுக்கு ஒரு துக்கச் செய்தி; உங்கள் தந்தை போரில இறந்துவிட்டார்!' என்ற சமாசாரத்தைக் கூறினார்.

அம்மாது சிரோமணி, 'இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன் -(நாம் இறைவனுககே சொந்தமாவோம்; அவனிடமே மீளுவோம்)' என்று கூறி, அதுசரி பெருமானார் முஹம்மது நபி (ஸல்) சௌக்கியமாக இருக்கின்றார்களா?' என்று உசாவினார்.

பதில் கிடைக்கவில்லை.

அவரை அடையாளங் கண்டுகொண்ட இன்னொருவர், 'அம்மணி! உங்களுடைய அருமைக் கணவர் போர்க் களத்திலே கொல்லப்பட்டார்' என்ற துக்கம் மிகுசெய்தியைத் தெரிவித்தார். அப்பொழுதும் அவர் 'இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்'' அதுசரி, இறுதி இறை தூதராம் நபிகள் நாதர் உயிரோடு இருக்கின்றார்களா?' என்றே உசாவினார்.

## எம். ஏ. ரஹ்மான்

பதில் கிடைக்கவில்லை. பயணந் தொடர்ந்தது

அந்தமாது சிரோமணியை அடையாளங் கண்ட 3-வது நபர் ஒருவர், 'தாயே உங்கள் அருமைக்கண்மணியாம் புதல்வன் யுத்த களத்திலே ஷஹீதாகிவிட்டான்' என்ற சமாசாரத்தைக் கூறினார். அப்பொழுதும்அவர்' இன்னா நபிகள் பெருமானார் உயிரோடு இருக்கின்றார்களா?' என்றே கேட்டார்.

பதில் கிடைக்கவில்லை. மீண்டும் பயணந்தொடர்ந்தது.

தந்தை, கணவன், புதல்வன், சகோதரன் ஆகியோரை ஒரே போர்க்களத்தில்-ஒரேநாளில், பறிகொடுத்த பின்னரும், உலகப் புனிதராம் எம்பெருமானாரின் சுகத்தை அறிந்துவிடல் வேண்டுமென்ற அவளுடைய பயணந் தொடர்ந்தது.

அப்பொழுது, அங்கு வந்துகொண்டிருந்த ஒருவர்பெருமானார் உயிருடன் இருக்கின்றார்களென்றும், யுத்த களத்திலிருந்து திரும்பிக் கொண்டிருக்கிறார்களென்றும் கூறினார்.



அப்பதில் அம்மாது சிரோமணிக்குத் திருப்தி அளிப்பதாக அமையவில்லை. பெருமானாரை நேரில் பார்த்துவிடல் வேண்டுமென்ற உறுதி கனிந்தது பெருமானார் இருக்குமிடத்தைக் காட்டும்படி கேட்டார். எதிரே வந்துகொண்டிருந்த கூட்டத்திலே பெருமானார் வந்துகொண்டிருப்பது சுட்டிக் காட்டப்பட்டது.

பெருமானாரைக் கண்டதும், ஓடோடிச் சென்று அன்னாரின் ஆடையைப் பற்றிக் கொண்டாள்.

(4ம் கலம் பார்க்க)


ஆதரவாளர்கள் அனைவருக்கும்

எமது

மீலாத் வாழ்த்துக்கள்

**கே.என்.எம். மீரான் சாஹிப்**

தங்கப்பவுண் நகைமாளிகை

கன்னாதிட்டி, (போன்: 585) யாழ்ப்பாணம்.




நீடித்த உழைப்பும்

நிறைந்த பயனும்மிக்க

உலகில்

புகழ் பெற்ற

றேடியோக்கள்






எல்லோர்க்கும் எமது மீலாத் வாழ்த்துக்கள்!

நீடித்து

உழைப்பதில்

நிகரேதும்

இல்லாதது




யூ ஆசா

பற்றறிகளே

வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்

**துரை அன் கோ**

23|3, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.



அன்பர்கள், ஆதரவாளர்கள்

அனுதாபிகள், அனைவருக்கும்

எமது

மீலாத் வாழ்த்துக்கள்


அரிய சேவையால் லட்சக்கணக்கான

மக்கள் உள்ளங்களின்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உலகில்

புகழ் பெற்ற



## றேடியோக்கள்

மிகவும் நிதான விலையில் கிடைக்கக்கூடிய

நம்பகமான ஸ்தாபனம்

மறவாதீர்கள்

## S. சுலேமான்கண்டு & பிறதர்

5 & 7 ஸ்ரான்லி வீதி

யாழ்ப்பாணம்,


கண்பார்வையில் மனிதனைப் போன்று தென்படின் பண்புகளை நோக்கும்போது விலங்கினுங் கொடியனாய் வாழ்கின்ருன் என்பது உள்ளூரப் புலனாகும். எவை மனிதனுக்கு ஆகாதவையோ அவை தலைமேற் சுமந்து போற்றப்படுகின்றன எவை வேண்டியவையோ அவை புறக்கணிக்கப்படுவதுடன் கேலிக்கிடமானவையாகிவிட்டன. இதனால் மனிதசமுதாயத்திலே பெரிய பிரச்னைகளும், சஞ்சலங்களும், பஞ்சமா பாதகங்களும் ஏற்பட்டுவிட்டன. இவை அகலவேண்டுமாயின் அண்ணல் நபியின் அடிச்சுவட்டைப் பின்பற்றிச் சீரிய முறையில் நடந்தொழுக வேண்டும்.

நிறைவேற்ருமல் இருத்தல், அமானிதத்தை மோசடி செய்தல் ஆகிய இம்மூன்று சின்னங்களும் (முனுபிக்) கள்ள விசுவாசிகளின் சின்னங்களாகும்.

(8ம் கலத் தொடர்ச்சி)

'அல்லாஹ்வின் தூதரே! தங்களின் தரிசனங் கிடைத்தது இப்போரிலே என் தந்தை-கணவன்- மைந்தன்- சகோதரன் ஆகிய இனசன பந்துக்கள் எல்லோரையும் இழந்தேன்... ஆயினும், எங்கள் இறுதித் தூதராம் எம் பெருமானுர் (ஸல்) அவர்களை உயிருடன் காணும் போது அத்துயரங்களையெல்லாம் மறக்கின்றேன்' என்று கண்ணீர் மல்கினுர் அம்மாது சிரோமணி.

நன்றி - இளம்பிறை

தந்தை, கணவன், மகன், சகோதரன் ஆகிய உறவினர்களும் ஆயுதமேந்திப் பங்கு பற்றினர், உறவினர்களுக்கு என்ன நேர்ந்ததென்பதைப் பற்றிக்கூட அவர் எண்ணிப் பார்த்தாரல்லர். 'பெருமானுர் ஷஹீ (வீரமரணம்) தாகி விட்டார்களா? என்ற வினுவுக்கான உண்மையை அறிந்துவிடல் வேண்டுமென்ற ஆவேசமே அவர் நெஞ்சமெல்லாம் நிறைந்து நின்றது.

உஹத் போர்க்களத்திலிருந்து திரும்பி வடுவோர்களிடம் 'பெருமானுர் ஷஹீ தாகிவிட்டார்கள்? என்பது உண்மைதானு என்ற ஏக வினவையே திரும்பத் திரும்பக் கேட்டாள,

வழியில் எதிர்ப்பட்ட ஒருவர், அம்மாது சிரோ சமாசாரத்தைக் கூறினுர். அப்பொழுதும்அவர்' இன்னு நபிகள் பெருமானுர் உயிரோடு இருக்கின்ருர்களா?' என்றே கேட்டார்.

பதில் கிடைக்கவில்லை. மீண்டும் பயணந்தொடர்ந்தது.

சற்று நேரத்திற் கெல்லாம் அவரை அடையாளங் கண்ட 4வது மனிதர் உஹத் போர்க்களத்திலே அம்மாது சிரோமணி தன்னுடைய சகோதரனையும் இழந்துவிட்டார் என்னும் துக்க சமாசாரத்தைக் கூறினுர். அப்பொழுதும் அம்மாது சிரோமணியின் உறுதி தளர்ந்துவிடவில்லை. பெருமானுர் உயிருடன்இருக்கின்ருர்களா?' என்பதற்கான விடைகாணவேண்டுமென்ற ஆசைதணியவுமில்லை'.


எமது

## மீலாத் வாழ்த்துக்கள்

அரிய சேவையால் லட்சக்கணக்கான

மக்கள் உள்ளங்களின்

அமோக

அன்பையும் ஆதரவையும் பெற்ற

நகை வியாபாரிகள்


## ஏ.கே.எஸ். அன் சன்ஸ்

(நகை மாளிகை)

63, 65, கன்னுதிட்டி ...... யாழ்ப்பாணம்.

போன்: 519





# உங்கள் பரமவிரோதிகளை அறவே ஒழித்திடுக!

**பீ எச் சி**

நெற் பூச்சி கட்டுப் பாட்டிற்கு ஷெல் பீ எச் சி 10% தூள் சிறந்தது. ஷெல் பீ எச் சி 6% துணுக்குகளும், ஷெல் பீ எச் சி 20% ம், நண்டு அரிப்புக்கு உகந்தது

**ஷெல் களைக்கொல்லி 'M-50'**

'எம்சிபிஏ' யின் ஓர் விசேஷ வகுப்பாடான இக்'களைக்கொல்லி,' 3-5 வாரம்வரை வளர்ந்திருக்கும் நெற்தானியத்தில் தெழித்து அகன்ற இலைக்களைகளையும், கோரைப் புல்லையும் தெரிந்து அழிக்கவல்லது.

**சுமித்தியன்**

ஓர் பாதுகாப்பான, நிச்சய கிருமிநாசினி. விசேஷமாக 'கோல் மிட்ஜ்'கட்டுப் பாட்டிற்கு உகந்தது.

**'என்ட்ரெக்ஸ்' 20**

இன்று அதிகமாகப் பாவிக்கப்படும், அதி சிக்கனமான, எல்லா நெற்களை அழிப்பிற்கும் உகந்த 'சகல-நிவாரண' கிருமி நாசினி.

**ஷெல்களைக்கொல்லி 'D'**

3-5 வாரம் வரையிலான நெற் தானியத்தில் தெழித்து அகன்ற இலைக் களைகளையும், கோரைப் புல்லையும் தெரிந்தகற்றும் 2, 4-D விகித 'எஸ்தர்' வகுப்பாடாகும்.

**'அசொட்றின்' 60**

ஏனைய கிருமிநாசினிகளால் அழிக்க முடியாத நெற் பீடைகளை முற்றழிக்க வல்ல; ஓர் வன்மைமிகு புதிய படிமுறை சகல-நிவாரண கிருமிநாசினியாகும்.

**ஷெல்களைக்கொல்லி 'P-20'**

ஈரலிப்பான நிலத்தில் பயிரிடும் நெல்வகையின் வேளாண்மைக்கு முன் தெளிக்க உகந்தது. இவ் வேளை சகல தாவரங்களதும் முற்றழிப்பிற்கும், முதல் மழையுடன் தெழிக்கச் சிறந்தது. வித்துக்கள் விதைத்தலின் பின்முளைத் தலைத்தடுக்க இம்முறை உகந்தது.

**'ஸ்டாம்' எப்-34**

7-18 நாள் வரையிலான நெற்தானியத்தைத் தாக்கும் அகன்ற இலைக்களை. கோரை, புல் அனைத்தையும் தெரிந்தழிக்க உகந்த புதிய சிராக்கிய 36% வகுப்பாடான 3, 4 டிபிஏ சேர்வையாகும்.




## வங்மிகம் இலங்கை லிமிட்டெட்

செலிங்கோ ஹவுஸ் த. பெ. 919 கொழும்பு.

ஷெல் ரசாயனப் பொருட்கள்

SHELL


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உலக மக்கள் நெறியுடன் வாழ்வதனுலேதான் உய்ய முடியும், பாவங்களைத் தவிர்த்து இறையின் நெறியில் நிற்பதனுல் ஈடேற்றம் பெறமுடியும். இந்தக் கடமையை செய்ய இறைவனது திருத்தூதராக அவதரித்தவர் முகம்மது (ஸல்)

இவரது வாழ்வை சீர்தூக்கிப் பார்க்கும்போது இவர் அல்லற்பட்டு அஞ்ஞானத்தில் அழ்ந்து கிடந்து மக்களை வழிப்படுத்தி ஒளிமயமான வாழ்வைக் காட்டிய உத்தமராக இவர் விளங்கினுர் என்பது புலனுகும்.

ஏறக்குறைய 1400 ஆண்டுகளுக்கு முன் எங்கும் அஞ்ஞானக் கங்குல் சுற்றிவளைத்துக் கிடந்தது. அராபிய மக்கள் அஞ்ஞானத்தின் காரணமாக நன்னிலையை மறந்து புன்னிலைப்பட்டுக் கிடந்தனர்.

இந்தக் காலகட்டத்தில் சீர்திருத்த ஒளியாகி புன்மை இருளைப் பொசுக்கி நன்மை ஒளிப்பிளம்பாகி நின்ருர் முகமது நபி (ஸல்) அவர்கள்.

முகமது நபி (ஸல்)க்கு முந்திய காலத்தில் தோன்றி நபிகள் குறிப்பிட்ட தேசத்துக்கோ அன்றி குறிப்பிட்ட சாகியத்துக்கோ உரியவராக விளங்கினர். ஆனுல் முகம்மது நபி (ஸல்) அவர்கள் உலகம் முழுவதுக்குமே பொதுவான தூதனுக மிளிர்ந்தார்.

ஜாதிகடந்து எல்லைகடந்து இனம்கடந்து யாவரையும் ஒன்றித்துக் கொள்கின்ற பண்புஉரியராகஅவர் விளங்கினுர்.

சர்வ உலக நாடுகளும் சகோதரதத்துஞ் அடிப்படையில் இயங்கும்போதுஅங்கே உலகுக்குப் பொதுவேயான ஜனநாயகம் தோன்றுமென்ற உண்மையை உணர்ந்து உணர்த்தியவர்.

# 'நபிகள் நாயகத்தின்(ஸல்) நல்லுரை கொள்வோம் நாம் நலம் பெறுவோம்'

இன்றையதினம் அப்பெருமானுர் பிறந்ததினமாகும் அப்பெருமானின் பெயரில் விழா வெடுக்கின்ருேம். ஊர்வலங்கள் நடத்துகின்ருேம். இவையாவும் அப்பெருமான் மீதுயாம்வைத்த அனவற்ற அன்பைக் காட்டுகின்றன.

அப்பெருமானுர் சொல்லும் செயலும் ஒன்றுபட்ட சிறந்தசேவையை செய்தவர் தியாகங்கள் அவரின் நன்னல நோக்கை நமக்குத்தி தெரிவிக்கின்றன. ஊண் உறக்கமின்றி கடமையை கண்ணுகக்கொண்டு இயங்கிய பெருந்தகையாளர் அவர். குறைமலிந்த போக்கைக் கடந்து நிறைவுற்றநேரிய ஆக்கத்தை நமக்கு நல்கியவர்.

இறைவனையாம் எவ்வாறு மதிக்கவேண்டும். எவ்வாறு யாம் இறைவணக்கம் செய்ய வேண்டும். எதைப் பேணவேண்டும்? எதைநீக்க வேண்டும் என்பன பற்றியெல்லாம் அலசிஆராய்ந்தே செயல்பட்டார்.

கருததற்ற வீண்பேச்சை விலக்கி நவைக்கட்டிக் காத்தவர்.

ஆகவே அநதபெருமானின் புகழ்பாடும் இந்தநன்னுளில் அவர் கைக்கொண்ட எளிய வாழ்க்கையை பின்பற்ற முயலவேண்டும், திருகுர் ஆனின் நெறிகளுக்கும், ஹதீஸ்களின் போதனைகளுக்கும் முரண்பட்ட செயலை விடுத்து நேரிய வாழ்க்கையில் சீராக யாம் நடக்க முற்படுவோம்.

சமத்துவம், இரக்கம் கருணை தர்மதானம் ஆகிய வற்றை நீக்கிவிட்டு வாழுவதனுல் நமக்குபயன் உண்டாகாது,

நபிகள் நாயகம் அவர்களின் நெறியை நெஞ்சில் வைத்து அஞ்சலி செய்வோம். நேரிய ஒழுக்கத்தையே யாம் நிலைபெறுடையதெனக் கொள்வோம். அப்போதுதான் நமக்கு ஆக்கம் கிட்டும்.

ஒழுக்கத்துக்கு உயிர் கொடுப்போம். உண்மையைப் பேணுவோம் தானதருமங்களைத் தடையின்றிச் செய்வோம் அமைதியான சுபீட்சம் பொருந்திய தூய்மையான வாழ்வு நமக்குக் கிட்டும்.

## நபிகள் பற்றிஅறிஞர் ஒருவர்

இஸ்லாத்தின் திருநபி அரசியல் திட்ட அறிவுக்கும் பொருத்தமான நம்பிக்கை புனிதம் பொருந்திய நடத்தை ஆதியன இல்லாத ஒரு நாட்டில் பிறந்தார். அதே நாட்டில் இம்மூன்றையும் நிலைபெறச்செய்தார். ஒரே நேரத்தில்பெரும் பிரயதனத்தோடு சமயக் கோட்பாட்டையும் அரசியல் திட்டத்தையும் தூய்மையான செய்கைகளையும் உண்டாக்கினுர்.

— ஸ்டான்லிலீலேன்

## உறுப்பினர்

தாவடி, ஞாயிறு

நல்லூர் மூத்தவிநாயகர் சனசமூக நிலையத்தின் 18 வது ஆண்டுப் பொதுக் கூட்டம் நிலைய முன்றலில் திரு. ஆ. சண்முகத்தின் தலைமையில் நடைபெற்றது பின்வருவோர் நடப்புவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்: திரு. வ. கந்தையா, தலைவர்: திரு ஆ சண்முகம், உபதலைவர்: திரு. இ. பத்மநாதன், செயலாளர்: திரு. தி. கணேசன், உபசெயலாளர்; திரு க. குகதாசன், பொருளாளர்: திரு. செ. நமசிவாயம்.

# நேர்வழி காட்டி நாயகம்

நாங்கள் எமது பெருமானுர் நபிகள்நாயகம் (ஸல்) அவர்களின் பிறந்த தினத்தை விசேஷமாக கொண்டாடுகிருேம். புனித றபீஉல் அவ்வல் மாதத்தில் நாங்கள் பிரசங்கங்கள் மூலமாகவும் வேறு பிரசாரங்கள் மூலமாகவும் நாயகத்தின் வாழ்க்கையில் பொதிந்துள்ள இலட்சியங்களைச் சரிவர அறியத் தெண்டிக்கிருேம்.

அவை எங்கள வாழ்க்கையிலும் பிரதிபலிக்குமாறு ஆண்டவனை இரந்தவர்களாய் இருக்கின்ருேம். நபிகள் நாயகம்[ஸல்] அவர்களின் புரட்சிகரமானபோதனைகளையும் சாதனைகளையும் தங்களுடை 'ஜாவித்நாமா' என்னும் சிறந்த கிரந்தத்தில், நாயகம்[ஸல்] அவர்களின் பரம விரோதி அபூஜஹில் பேசுவதுபோன்று ஒப்புவமையற்ற முறையில் வர்ணித்திருக்கிருர்கள். கவியரசர் அல்லாமாஇக்பால் அவர்கள். அபூஜஹில் நாயகத்தால் சுயநலமிகளுக்கு வந்த மோசத்தைச் சுட்டிக்காட்டி பின்வருமாறு கடிந்துரைக்கின்ருன்:-

'முகமது என்ன செய்தார் பார்த்நீர்களா! என்தோழர்களே] உலகத்தாரே! எங்கள் இதயங்களை எல்லாம் அவர் தம் செயல்களால் புண்படுத்திவிட்டார். லிக்கிரக பீடமாயிருந்த கஃபாவை அழித்து விட்டார். சர்வாதிகாரம்'சாம்ராச்சியம் ஆகியவைகளுக்கு முற்றுப் புள்ளி போட்டு விட்டார். எங்கள் இளைஞர்களைத் தம் வலையில் கெட்டித்தனமாய்ச் சிக்கவைத்து விட்டார். எங்கள் பரம்பரைத் தெய்வங்களாகிய லாத்தையும் மனுத்தையும் துண்டுதுண்டாக்கினுர் உலகமே, நீ இதைப்பார்த்துக் கொண்டுதான் இருக்கிருயோ? முகம்மது எ படியானவர் தெரியுமா? அழிவுள்ள பொருட்களை அடியோடு வெறுத்து அழிவில்லாப் பரம்பொருளை அல்லும் பகலும் தேடியவர். இப்பொழுது காணப்படும் கா'ப்சிகள் நாளைக்கு அழியக் கூடியவை என்ற உண்மையை நிரூபித்தவர், தாம் கொண்டுவந்து சாதித்தசன் மார்க்கநேறியால் தேசத்திமிர். சாதித்திமிர் ஆகியவற்றையும் அவை போன்றவற்றையும் அடியோடழித்தவர் குறைஷிக் குடும்பமும், அரபுச்சாதியும் என்பன பிற குடும்பங்கள் சாதிகளைப் பார்க்கிலும் மேலல்ல என்பதை வற்புறுத்தியவர். மேம்பட்டவன் எனக்கருதப் படுவோனும் கீழ்நிலையிலுள்ளவன் எனப்படுவோனும் சரிசமம் எபன்தை வற்புறுத்தியவர். அடிமையோடு ஒன்று சேர்ந்து உணவருந்தியவர் இத்தகையவரே முஹம்மது''

இவ்விதமாக உணர்ச்சிததும்பும் முறையில் எங்கள் மார்க்கத்தின் விசேஷப் பண்புகளாகிய ஏக தெய்வக் கொள்கையையும், (தௌஹீத்) முஸ்லிம் சகோதரத்துவத்தையும் கவியரசர் அல்லாமா இக்பால் விளக்கியிருக்கிருர்கள். நமது ஏகதெய்வக்கொள்கை தனித்தன்மை பொருந்தியது. ஆண்டவனுக்கு அடிபணிதல் என்பதே இஸ்லாம் என்ற பதத்திற்குரிய பொருளாகும். வணக்கத்திற்குப் பாத்திரமான நாயன்யாருமில்லை, அல்லாஹ்த்த ஆலாவைத்தவிர எல்லாப்புகழும் அவனுக்கே உரியன. அவன் இணைதுணை அற்ற ஏகன் அவனின்றி ஓர் அணுவும் அசையாது. ஆக்கவும் அழிக்கவும் வல்லவன் அவனே. நிகரற்றஅன்புடையோனும், அளவற்ற அருளாளனும் அவனேயாவன். இத்தன்மைகளையே இஸ்லாம் எப்பொழுதும் வற்புறுத்துகின்றது. முஸ்லிம் சகோதரத்துவத்தைப் பற்றிப்பல இடங்களில் எங்கள் நாயகம் (ஸல்) அழுதம் திருத்தமாகக் கூறியுள்ளார்கள் விசேஷமாக அவர்கள் இறுதியாகச்செய்த ஹஜ் யாத்திரையின்போது அவர்கள் திருவாய்மலர்த்தருளியவற்றை இங்கு குறிப்பிட்டல் வேண்டும், அவர்கள் அவ்வேளையில் பின்வருமாறு கூறினுர்கள்:-

'எனதுமக்களே! கேளுங்கள் ஒவ்வொரு முஸ்லிமும் மற்ற முஸ்லிமின் சகோதரன். முஸ்லிம்கள் அனைவரும் சகோதரர்கள் என்பதை மனதில் திட்டமாகப் பதியவைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் எல்லோரும் சமமானவர்கள்; சமஉரிமை உடையவர்கள்; ஒரேவிதமான கடமைசெலுத்த வேண்டியவர்கள்; ஏக சகோதரத்துவத்தால் பிணைக்கப்பட்ட ஒரு சமுதாயத்தின் அங்கத்தவர்கள். நீங்கள் உங்கள் சகோதரர்களிடமிருந்து அவர் உங்களுக்குக் கொடுக்காத 'ஒரு பொருளை எடுப்பதுகூடாது. இப்புனிதமான குர்ஆனை உங்களுக்கு நான் விட்டுச் செல்கிறேன் இதைத் தளராது கடைப்பிடித்து நடவுங்கள். இன்றேல் நீங்கள் வழிதப்பிப் போய்விடுவீர்கள்'.

நபிகள் நாயகம் [ஸல்] அவர்களே பரிபூரண மனிதர், மானிடர்க்கு வழிகாட்டி மனிதவர்க்கத்தாருமே ஒரு நமூனு அல்லது உதாரணன் ஆகவே நாங்கள் மற்றவர்களிலும் நாயகம்(ஸல்) அவர்களையே நேசிக்கவேண்டும் நேசித்து அவர்களின் கிருபையைநாடவேண்டும் நாடி ஆண்டவனின் அருளைப் பெறவேண்டும்

ஓர் உண்மை முஸ்லிம் ஆண்டவனைப்புகழ்பவனுயும் அவனுடையகட்டளைகளுக்கு அடிபணிபவனுயும் இருப்பான் அவனது நாவினுலும் கையினுலும் உலகத்தாருக்கு நன்மையேயன்றி வேறென்றும் விளையாது.

நபிகள் பெருமானுர் அவர்களின் வாழ்க்கை கற்பனைக் கட்டுக்கதைகளால் பீடிக்கப் படாமல் சரித்திரபூர்வமான விசேஷத் தன்மைபெற்றது எங்கள் நபிகள் நாயகமவர்கள் சமாதான கர்த்தராயிருந்தார்கள். ஆனுல் சமயம் நேர்ந்த பொழுது போர்

(6-ம் பக்கம் பார்க்க)

— ஏ. எம். ஏ. அஸீஸ் --

★ நாகரிக வேலைப்பாடுடைய

★ நங்கையர் உருவுக்கு

பொலிவூட்டும்

உத்தரவாதமுள்ள

தங்க, வைர நகைகளுக்கு

பேர்பெற்ற ஸ்தாபனம்

## "ஒழுக்கமே ஓங்க வாழ்வோம்!"

மாநில மக்கள் உய்ய
மாண்புறு மக்கா தன்னில்
ஞானமே வடிவாய் எங்கள்
நபிகள் நாயகமே பூத்தார்
கூனிய கொள்கை போக்கி
குணம்பெறும் நெறிகள் ஆக்கி
தானுவந் தீந்தே யெல்லாம்
தழைத்திட உழைத்தும் நின்ருர்.

சமத்துவம் அன்பு என்ற
தகைமைகள் தலையே ஓங்க
அமைதியோ டடக்கம் பண்பு
அலர்ந்துயர் வுண்மை ஓங்கி

இலங்கை
குடும்பத்திட்ட சங்கம்

பெற்ருேர் அடுத்தடுத்துப் பிரசவிப்பதால் தாயின் உடல்நிலை பாதிக்கும். அடுத்த பிள்ளைப் பேற்றை இப்போதே திட்டமிடுங்கள். இடைவெளி விட்டுப் பிள்ளை பெறவும், பிள்ளைப்பேற்றைத் தடைசெய்யவும் அருகிலுள்ள குடும்பத் திட்டக்கிளினிக்குக்குச் செல்லுங்கள்.

இலங்கை பூராவும் 440 குடும்பத்திட்டக் கிளினிக்குகள் இருக்கின்றன. 23/5 கோற்ரன் பிளேஸ், கொழும்பு 7 தினசரி கிளினிக் நடைபெறுகின்றன,

தொலைபேசி

★ கவர்ச்சியான இழை

★ நீடிய பாவிப்பு

★ சொகுசான ஓட்டம்

★ உத்தரவாதமுள்ள வேலைப்பாடு

ஆகியவற்றிற்கு

உங்கள் தேய்ந்துபோன டயர்களை

எம்மிடம் புதுப்பியுங்கள்

நோர்தேண்
இண்டஸ்ரீஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்க, வைர நகைகளுக்கு


பேர்பெற்ற ஸ்தாபனம்

# ராணி ஆபரண மாளிகை

224, கே. கே. எஸ். வீதி — யாழ்ப்பாணம்

Manager: A. KARAPUTUGALA.






அறவே களைகளை அழிக்குமென நிரூபிக்கப்பட்ட சேர்கோப்பூர் 36%, 3.4 டீ.பீ.ஏ. கொண்டது. 35% முதல் 75% வரை அது விளைச்சலைப் பெருக்கும். நெல் விதைத்து 7-21 நாட்களுள் அதைப் பாவிக்க வேண்டும்.

இக் களைகொல்லியைத் தெளிப்பது மிகச் சுலபம்; மிகச் சிக்கனம்.

சேர்கோப்பூர், பேயர் விவசாய இரசாயனப் பொருள். பேயர் பொருள்கள். ஜெர்மனியில் 100 வருட தொழில் நுட்ப ஆராய்ச்சியின் ஆதாரம் கொண்டவை.

சிக்கனமாக, சிறப்பாகப் பயிர்களைக் காப்பது - சேர்கோப்பூர். அது, களவு செய்ய முடியாத போத்தலிற் கிடைக்கும்.

பசளையைக் களை தின்று விளைச்சலைக் குறைக்கிறதா?




## சேர்கோப்பூர் 36%

களைகளைக் கொல்கிறது

BAYER ®

மூலப் பொருட் சத்து உற்பத்தியாளர்:
பேயர்
மேற்கு ஜெர்மனி.

இலங்கையில் தயாரிப்போர்:
ஹேக்கெம் லிமிட்டெட்,
400, டீன்ஸ் வீதி, கொழும்பு-10

P. 9152 R


கூனிய கொள்கை போக்கி
குணம்பெறும் நெறிகள் ஆக்கி
தானுவந் தீந்தே யெல்லாம்
தழைத்திட உழைத்தும் நின்றார்.

சமத்துவம் அன்பு என்ற
தகைமைகள் தலையே ஓங்க
அமைதியோ டடக்கம் பண்பு
அலர்ந்துயர் வுண்மை ஓங்கி
நமையுல கத்தில் காக்க
நபிகளார் பிறந்தார் இந்நாள்
அமைவுற அவரை நெஞ்சால்
அனைவரும் ஏற்றி வாழ்வோம்

உண்மையே உயிர தாக
உலகினில் இரக்கம் ஓங்க
திண்மையே பெற்ற தான
சீரிய நெறிகள் காட்டி
வண்மையே ஊட்டி நின்ற
வள்ளலாம் நபியின் ஞான
ஒண்மையிற் சென்றே என்றும்
ஒழுக்கமே ஓங்க வாழ்வோம்.

— இறைதாசன்


எல்லோர்க்கும் எமது மீலாத் வாழ்த்துக்கள்

யாழ்ப்பாண மக்களை
கவர்ந்த
கண்ணாடி வியாபாரிகள்

## ஜெஸிமா பிக்சர் பலேஸ்

222, 232, கே. கே. எஸ். ரோட் — யாழ்ப்பாணம்:
போன்: 7127

கிளை: ஜெஸிமாஸ்

95, ஸ்ரான்லி ரோட் :-: யாழ்ப்பாணம்.



தந்தி: யாழ் மெற்றல் தொலைபேசி எண்: 7049

## யாழ் உலோகத் தொழிற்சாலை

உறுதியும் உத்தரவாதமுமுள்ள

★ கும்பகோணம் குடம்
★ செம்பு
★ தாம்பாளம்
★ கிடாரம்
★ வங்காளம் சட்டி
★ இட்டலிச் சட்டி

ஆகியனவும்
வீட்டுப் பாவனைக்குரிய சகல யாழ் மார்க் அலுமினியப் பாத்திரங்களும் தயாரிப்பாளர்களும் சில்லறை மொத்த விநியோகஸ்தர்களும்

கோயிலுக்குத்தேவையான திருவாசி, கொடித்தம்பம் ஆகியனவும் மற்றும் சகல சாமான்களும் ஓடருக்குச் செய்துகொடுக்கப்படும்.

தொழிற்சாலை & கந்தோர்

250—254, கே. கே. எஸ். வீதி — [illegible]ணம்.



செலவுங்கள்.

இலங்கை பூராவும் 440 குடும்பத்திட்டக் கிளினிக்குகள் இருக்கின்றன. 23/5 கோற்றன் பிளேஸ், கொழும்பு 7 தினசரி கிளினிக் நடைபெறுகின்றன,

தொலைபேசி இல: 92354. விபரங்களுக்கு: குடும்பத்திட்ட தகவல் 457, காலி வீதி, கொள்ளுப்பிட்டிக்கு இன்றே எழுதுங்கள்.
(கடிதங்கள் இரகசியமாக வைக்கப்படும்.)



## நோர்தேண் இன்டஸ்ரீஸ்


டயர் நிரப்புபவர்கள்

8/1, ஸ்ரான்லி வீதி — யாழ்ப்பாணம.

தொலைபேசி: 7158



## செலவினங்களுக்குக் கடிவாளமிடுவது ஊஷா



ஊஷா விசிறிகள் உங்கள் மாதாந்தச் செலவைச் சுருக்குகின்றன; மின்சாரச் செலவுக் கட்டணத்தைக் குறைக்கின்றன; பராமரிப்பு விஷயத்தில் நீங்கள் பராமுகமாக இருந்துவிடலாம். உங்கள் இல்லத்தின் அழகுக்கு அழகு செய்யும் ஒயிலான வடிவங்களில் கிடைக்கின்றன.*

*ஜே் கூட்டுடனே கூட் இன்றியோ.



சிறந்ததை வாங்குங்கள்: ஊஷா எல்லாவற்றிலும் சிறந்தது

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதி, மெயின் வீதி ஆகியவற்றிலுள்ள ஊஷாவிற்பனை நிலையங்களிலும் சாவகச்சேரி, சுன்னாகம், பருத்தித்துறை, அச்சுவேலி, கிளிநொச்சி, திருகோணமலை, அநுராதபுரம் மற்றும் நகரங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எகிப்தியரின் இரு போர்க் கப்பல்களை இஸ்ரேலியர் மூழ்கடித்தனர்

## செங்கடல் துறைமுகம் தாக்கப்பட்டது

டெல் அவிவ், மே 17

**ஐக்கிய அரபுக்குடியரசுக்கு சொந்தமான இரு போர்க் கப்பல்களை இஸ்ரேலிய சண்டை விமானங்கள் குண்டு வீசி மூழ்கடித்துள்ளன**

செங்கடலில் ரோந்து பணிகளில் ஈடுபட்டிருந்த இந்த இரண்டு ஐக்கிய அரபுக்குடியரசு கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டதாக இஸ்ரேலியர் அறிவித்தனர்.

செங்கடலிலுள்ள ஐக்கிய அரபுக்குடியரசு துறைமுகத்திற்கு இஸ்ரேலியர் கடுமையான சேதங்களை ஏற்படுத்தினர்களாம்.

இஸ்ரேலிய விமானங்கள் பெருமளவில் வந்து தாக்குதல்களில் ஈடுபட்டதாக எகிப்தியர் ஒப்புக்கொண்டனர் என்றாலும் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டது சம்பந்தமாக எதுவும் தெரிவிக்கவில்லை. மூன்று அரபுக்கள் காயமடைந்ததாகவும் இரு இஸ்ரேலிய மிராஜ் சண்டை விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டதாகவும் எகிப்தியர் கூறினார்கள்.

கடலில் மூழ்கடிக்கப்பட்ட கப்பல்களில் ஒன்று நாசகாரி ரகத்தைச் சேர்ந்தது என்றும் மற்றது ஏவுகணைகளைச் செலுத்தும் திறம் படைத்ததென்றும் கூறப்படுகின்றது. இதில் ஒன்று கடந்த உலக யுத்தத்தின் போது பிரிட்டிஷாரால் உபயோகிக்கப்பட்டது என்று ஒரு நிருபர் கூறுகிறார்.

சில தினங்களுக்கு முன்னர் இஸ்ரேலியரின் ஏலாத் துறைமுகத்தின் மீது ஐக்கிய அரபுக்குடியரசு விமானங்கள் தாக்குதல் நடத்தியதற்கும் இஸ்ரேலிய மீன்பிடிக் கப்பலொன்றின் மீது தாக்குதல் நடத்தியதற்கு எதிர் நடவடிக்கையாகவே மேற்குறித்த இரு கப்பல்களையும் தாங்கள் மூழ்கடித்ததாக இஸ்ரேலியர் அறிவித்துள்ளனர்.

### லெபனான்பிரதமர்

லெபனான் பிரதம மந்திரி திரு. ரஷீட் கராம் இன்று தமது ராணுவத் தளபதியுடன் சிரியாவுக்குப் போகிறார்.

லெபனானிலுள்ள பாலஸ்தீன கொரில்லா நிலைகள் மீது இஸ்ரேலியர் ஊடுருவித் தாக்குதல்களை நடத்தியதைத் தொடர்ந்து சிரியா கொரில்லா அணிகள் ஆயுதங்களுடன் லெபனான் எல்லைகளைத் தாண்டி நாட்டுக்குடி அடிக்கடி புகுந்து வருவதையொட்டி லெபனான் பிரதம மந்திரி திரு. ரஷீட் கராமி டாமஸ்காவில் சிரியா தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவாரென்று தெரிகின்றது.

## பௌர்ணமி கலை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற பௌர்ணமி விழா 20-4-70 புதன்கிழமை மாலை யாழ். திறந்தவெளி அரங்கில் நடைபெறும்

மாநகரசபை முதல்வர் திரு. தா. துரைராஜா இவ்விழாவிற்குத் தலைமைவகிப்பார். தேவி சகோதரிகள் குழுவினரின் இசைத்தென்றல் நிகழ்ச்சியும், கே. பி எம். நாடக கலா மன்றத்தினரின் தங்கப்பதக்கம் பரிசு பெற்ற 'நீறுநற்று' என்னும் சமூக நாடகமும் நடைபெறும்.

## குடியேற்றப் பகுதியில் குழந்தை நோய்

யாழ்ப்பாணம், திங்கள்

பெரிய பரந்தன், குஞ்சுப் பரந்தன், உருத்திரபுரம், நீவில் அக்கராயன் குளப் பகுதியில் குழந்தைகளுக்கு ஒருவித நோய் ஏற்பட்டுள்ளது நோய் சுமார் ஒரு வயதிற்கும் இரண்டு வயதிற்கும் உட்பட்ட குழந்தைகளையே பீடித்துள்ளது. வயிற்றோட்டம் வாந்தி முதலிய நோயினால் குழந்தைகள் பீடிக்கப் படுகின்றன. அப்பகுதிச் சௌக்கிய அதிபரிடம் குடியேற்றப் பகுதி மக்கள் இது பற்றிப் பீதி தெரிவித்துள்ளனர்.

பம்பாயில்

## ஈராக் முன்னாள் தூதர் சுட்டுக் கொல்லப்பட்டார்

பம்பாய், மே 17

பம்பாயிலுள்ள ஈராக் கான்சல் ஜெனரல் ஹம்மத் அல் ஹார்டன் கடந்த வியாழக்கிழமை கான்சல் ஜெனரல் அலுவலகத்தில் உள்ள 'பனோரமா' கட்டிடத்தில வைத்து மாஜி ஈராக் தூதர் அலிசெயித் என்பவரை சுட்டு கொன்றார்.

ஒரே நாட்டைச் சேர்ந்த அந்நியர்களிடையே சண்டை ஏற்பட்டு இத்தகைய கொலைச்சம்பவம் பம்பாய் நகரில் நிகழ்ந்தது இதுவே முதல் தடவையாகும்.

கொல்லப்பட்ட அலிசெயித் என்பவர் பெப்ரவரி 6ந் திகதி இந்தியாவுக்கு வந்தார். அன்றிலிருந்து இவர் பம்பாயில் தங்கியிருந்தார்.

மேற்படி நபரை சுட்டுக் கொன்றவராகிய அல்ஹார்டன் 1968-ம்ஆண்டிலிருந்து பம்பாயில் ஈராக் கான்சல் ஜெனரலாக இருந்து வருகிறார்.

அல்ஹார்டன், அல்செயித்தை விருந்துக்காக அழைத்து கைத்துப்பாக்கியால் ஏழுதடவை சுட்டுவீழ்த்தினார் எனவும் தெரியவருகிறது.

'பனோரமா'வைச் சுற்றிலும் பொலிசார் நிறுத்தப்பட்டுள்ளனர். கட்டிடத்திற்குள் அலிஹார்டன் தமது மனைவியுடனும் மூன்று குழந்தைகளுடனும் இருக்கிறார். கமிஷனர் ஸ்ரீ ஜி. பி. பிரதான் தலைமையில் நகர பொலிசார் இச்சம்பவம் குறித்து புலன்விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கம்போடிய நகர்மீது வியட்காங் முற்றுகை

## அமெரிக்கப்படைகள் திரும்புகின்றன

சைகோன், மே 17

கம்போடியாவில் முக்கிய மூன்றாவது நகரமான கம்பங்சான் என்ற இடத்தை வியட்காங் துருப்புகள் தம் வசமாக்கிக்கொள்ளும் அளவுக்கு கம்போடிய துருப்புகளை நிர்ப்பந்தங்களுக்குள்ளாக்கியிருக்கிறார் என்று செய்திகள் கூறுகின்றன. அங்குநிலைமிக மோசமாகவிருப்பதாகவும் அறியப்படுகின்றது.

இப்பகுதியில் கம்போடிய துருப்புகளின் மூன்று அணிகளை வியட்காங்கியர் வளைத்துக்கொண்டு விட்டதாகவும் செய்திகள்கூறின. இப்பகுதிக்கு கம்போடிய துருப்புகள் புதிதாக விரைந்து போய்க் கொண்டிருக்கிறார்கள்.

அமெரிக்க விமானங்கள் இந்த நகரின் சுற்றுப்புறங்களிலுள்ள வியட்காங்கியரின் ராணுவ நிலைகள்மீது குண்டுகளை வீசிவருகிறார்கள்.

### வெற்றியாம்

இதற்கிடையில் கம்போடியாவில் அமெரிக்கா மேற்கொண்ட ராணுவ நடவடிக்கைகள் பெரும் வெற்றியடைந்திருப்பதாகவும் அங்கு அனுப்பப்பட்ட அமெரிக்க படைகளில் மூன்றில் ஒரு பகுதியினர் தென் வியட்னமுக்குள் திரும்பி வந்துவிட்டார்கள் என்றும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஜூன் மாத இறுதிக்குள் அங்குள்ள அமெரிக்க படைகள் யாவும் பெறப்பட்டுவிடும் என்றும் இப்பொழுது சுமார் 10 ஆயிரம் அமெரிக்கத் துருப்புகள் அங்கு இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

கம்போடியாவுக்குள் தென் வியட்னும் படைகளும் அமெரிககப்படைகளும் பிரவேசித்தபின்னர் சுமார் 7500 வடவியட்நாமியரும் வியட்காங்கியரும் கொல்லப்பட்டதாவும் சுமார் 3 ஆயிரம் தொன் உணவுகளும், 12 ஆயிரம் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

## சர்வதேசக்கட்டுப்பாட்டு கமிட்டிக்கு அழைப்பு

கம்போடியாவில் அமைதியை ஏற்படுத்துவதற்கு சர்வதேசக் கட்டுப்பாட்டுக் கமிட்டியை மீண்டும் அழைக்கவேண்டும் என்று ஜகார்த்தாவில் கம்போடியா சம்பந்தமாக நடைபெற்ற மகாநாட்டில் பலநாடுகள் யோசனை தெரிவித்திருப்பதாகத் தெரிகின்றது. சர்வதேசக் கட்டுப்பாட்டு கமிட்டியில் இந்தியா, போலந்து, கனடா ஆகியநாடுகள் அங்கம் வகிக்கின்றன.

இந்தமகாநாட்டில் 11 ஆசிய பசிபிக் நாடுகள் அங்கம் வகிக்கின்றன,

## 'என்திட்டங்களை நிறைவேற்ற சந்தர்ப்பம் தாருங்கள்'

யாழ்ப்பாணம், திங்கள்

''கச்சாய் உப்பளத் திட்டமும் கைதடி ஆயுர்வேதக் கல்லூரியும் தங்கள் முயற்சியினால்வந்ததெனதமிழரசார் கூறுகின்றனர். அதேநேரத்தில் தமிழ்ப்பிரதேசங்களில் அபிவிருத்திவேலைகள் நடைபெருத காரணத்தினால் அரசாங்கத்தை விட்டு வெளியேறியதாகத் தமிழரசுக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் கூறுகிறது, இதில் எது உண்மையெனத் தமிழரசார் கூறுவார்களா?''

கச்சாயில் நேற்றுமுன்தினம் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் சாவகச்சேரி முன்னாள் எம். பி. திரு. வி. குமாரசாமி பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

திரு க கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு குமாரசாமி மேலும் கூறியதாவது: ''திரு. ஜி ஜி பொன்னம்பலம் மந்திரியாக இருந்தபோது கச்சாய் உப்பளத் திட்டம் கொண்டுவரப்பட்டது. பின்னர் நிபுணர்கள் ஆராய்ந்து கச்சாய்ப் பகுதியில் உப்பளத்தை நிறுவுவதற்கு சிபார்சு செய்தனர். இதற்கும் தமிழரசாருக்கும் எவ்வித தொடர்புமில்லை, தேசியஅரசாங்கத்தில் தமிழரசார் இருக்கும் வரை எவ்வித அபிவிருத்தித்திட்டங்களும் தமிழ்ப்பகுதிகளில் நடைபெறவில்லை.

1949-ம் ஆண்டு செப்டம்பர் 23-ம் திகதிதான் ஆட்சிமன்றத்தில் கைதடியில் ஆயுர்வேதகல்லூரியும் வைத்தியசாலையும் நிறுவவேண்டுமென ஒரு தீர்மானம் கொண்டுவந்தேன், அத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அப்பொழுது கைடியில் அதற்கான காணியும் பதிவுசெய்யப்பட்டது.

நாவற்குழியில் நிறுவப்பட்டுள்ள உணவுக்களஞ்சியமும் என் முயற்சியினாலேயே நிறுவப்பட்டது. நான்உதவி உணவுமந்திரியாக இருந்தபொழுது இதற்கானமுயற்சி எடுத்தேன்நான்ஆட்சிமன்ற உறுப்பினராகஇருந்தபோது போட்டதிட்டங்கள் பல இன்னும் நிறைவேற்றப் படாமலிருக்கின்றன அத் திட்டங்களை நிறைவேற்ற ஒரு சந்தர்ப்பம் தாருங்கள்.

திருவாளர்கள் ரி. குலேந்திரராஜா, ஆ. கனகரத்தினம், கே. ராஜகுலேந்திரன், பொ' சண்முகநாதன் உட்பட மற்றும் பலரும் பேசினர்.

சென்னை

## துறைமுக வேலைநிறுத்தம் முடிவடைந்தது

சென்னை, மே 17

சென்னைத் துறைமுக தொழிலாளர் வேலைநிறுத்தம் நேற்று முடிவடைந்தது. தொழிற்சங்கத் தலைவர்களுக்கும், மத்திய மந்திரி சஞ்சீவையாவுக்கு மிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் பின்னர் இம்முடிவு அறிவிக்கப்பட்டது.

இப்பேச்சு வார்த்தையில் தி. மு. க. சார்புதொழிற்சங்க பிரதிநிதிகளின்சார்பில்டில்லி பாராளுமன்ற அங்கத்தவர் நாஞ்சில்கே மனோகரன் கலந்து கொண்டார். தமிழக முதலமைச்சர் இவ்வேலை நிறுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர பெருமுயற்சி எடுத்து வந்தது குறிப்பிடத்தக்கது. பிரதமர் இந்திரா காந்தியை தலையிடும்படி கருணாநிதிவேண்டிக் கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

நடைபெற்றபேச்சு வார்த்

டெற்றேல் பாவித்து உங்கள் குடும்பத்தைப் பாதுகாருங்கள்

காவேரி தண்ணீர்ப்பிரச்னை

# முதல்வர்கள் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது

சென்னை, மே 17

காவேரித் தண்ணீர் விநியோகம் சம்பந்தமாக சென்னையில் ...தும் பாதிக்கப்படுவார்கள் என்று தமிழ்நாடு அரசு ஆட்சேபம் எழுப்பியது. என்றாலும் மைசூர் அரசு இந்த ஆட்சேபனைகளைப்

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

## 'உலகின் முதல் சோஷலிச

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாதுகாருங்கள்



**வெட்டுகள், புண்கள், சவரக் காயங்கள் அடிக்கடி ஏற்படுவன. கிருமிகள் இலகுவாகத் தொற்றக் கூடிய அவை, ஆபத்தில் முடியக்கூடும்.**

சருமத்தில் விழும் மிகச் சிறு கீறல் மூலம் கூட ஆபத்தான கிருமிகள் உங்கள் உடம்பில் நுழைந்து நோயும் நோய்த் தொற்றும் ஏற்படுத்த முடியும்.

உங்கள் குடும்பத்தைக் காக்க, கிருமிகளை விரைந்து கொல்லும் டெற்றோல் பாவியுங்கள்.

டெற்றோலை -

* வெட்டுகள், புண்கள், சவரக் காயங்கள்,
* பூச்சிக் கடிகளுக்கும்,
  குளியல் தொட்டியிலும்,
* மாதரின் அந்தரங்க சுகாதாரத்துக்கும், துர்மணம் உண்டாக்கும் கிருமிகளைக் கொன்று சுத்தம் ஊட்ட வல்லதாகையால் துர்மணமகற்றவும், பாவியுங்கள்,
* முதலில் டெற்றோல் தேக நோய்த் தொற்று நாசினியெனினும், கழுவு தொட்டிகள், குளியல் தொட்டிகளையும், தரையையும், குறிப்பாக வீட்டில் நோயாளர் உள்ள வேளைகளில் தொற்றுக் கிருமியற்றிருக்கச் செய்யவும் அது வாய்ப்பான துணை.



டாக்டர்களும் ஆஸ்பத்திரிகளும் பாவிப்பது டெற்றோல். ஏனெனில், பொதுவாக நோய்களைப் பரப்பும் சகல வித கிருமிகளையும் விரைந்து கொல்லும் நம்பகமான தொற்று நாசினி அது என்பதை அவர்கள் அறிவார்கள். உங்கள் குடும்பத்தைத் தொற்று நோயிலிருந்து காக்க, அவர்களைப் பின்பற்றி, உலகின் அதி நம்பகம் வாய்ந்த தொற்று நாசினியான டெற்றோல் பாவியுங்கள்.

ஒரு றெக்கிட் அன்ட் கோல்மன் உற்பத்தி


நிறுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர பெருமுயற்சி எடுத்து வந்தது குறிப்பிடத் தக்கது. பிரதமர் இந்திரா காந்தியை தலையிடும்படி கருணாநிதிவேண்டிக் கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

நடைபெற்றபேச்சு வார்த்தையின் முடிவில் இருமாதத்திற்குள் ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் விசாரணை செய்துநியாயமான தீர்வு காண இருதரப்பினரும் ஒத்துக் கொண்டனர்.

# இன்றைய பலன்

வைகாசி மீ 4-ம் திகதி

[18-5-70]

**மேஷம்-** சொற்சிலம்பம் ஆடுவதில் மற்றவரைச் சொக்க வைப்பீர். சொகுசான நாள்.

**ரிஷபம்-** தந்தைவழி ஆதரவு தவறாமல் கிடைக்கும்.

**மிதுனம்-** செய்தொழில் சிறப்படையும். சீரான நிலையும் காணும்.

**கடகம்-** அவசர புத்தியினால் விபரீதங்கள்விளையலாம். கோபத்தை அடக்கின் நிலைமை சீர்படும்.

**சிம்மம்-** எதிர்பாராத விளைவுகளின் மூலம் செலவுகள் அதிகமாகும். சிலர்வாழ்க்கையில் கடன் படநேரிடும்.

**கன்னி-** சிறிய விபத்துக்கு கூட அதிக ஆத்திரம் தோன்றக்கூடும். துணிவே துணையென இருக்கவும்.

**துலாம்-** பக்கத்தில் படுகுழி. பார்த்திருப்பர் பகைவர். விழிப்புடன் இருப்பின் வெற்றியும் உனதே.

**விருச்சிகம்-** ஆசையின் பிடியில் அலைமோதும் நெஞ்சம் நிதானம்நன்று.

**தனு-** வாகன விருத்தியுடன் இல்லத்தில்திருப்தி காணும். முன்னேற்ற வழியும் தோன்றும்.

**மகரம்-** தெளிந்தமனம் தெய்வசிந்தை தேடியது கிடைக்கும்?

**கும்பம்-** தூரதேசவாசம் உங்களைத் துயரத்தில் ஆழ்த்தும், ஆயுதங்களுடன் பழகுபவர்களுக்கு அவதானம் வேண்டும்.

**மீனம்-** இன்பத்தின் அணைப்பு இன்று தாராளமாகக் கிடைக்கும். பெற்றோர் ஆதரவும் உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

# தோல்வியில் முடிந்தது

சென்னை, மே 17

**காவேரி தண்ணீர் விநியோகம் சம்பந்தமாக சென்னையில் நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிந்திருப்பதாக அறியப்படுகின்றது.**

மைசூர், கேரளம், தமிழ்நாடு ஆகிய மூன்று ராஜ்ய முதலமைச்சர்களும் நடத்திய இப்பேச்சுவார்த்தைகளில் எதுவித தீர்க்கமான முடிவும் ஏற்படவில்லை. ஆனால் இந்தப் பிரச்னை சம்பந்தமான நுட்டங்கள் பற்றி மேலும் தெரிந்து கொள்வதென்று முதலமைச்சர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

மூன்று ராஜ்யங்களிலுமுள்ள பொறிஇயல் அறிஞர்கள் காவேரி தண்ணீர் சம்பந்தமான நுட்ப அம்சங்கள்பற்றிய அறிக்கைகளை மூன்று மாதங்களுக்குள் தயாரித்து முதல்மந்திரிகளிடம் சமர்ப்பிப்பார்கள்.

காவேரி ஆற்றில் மைசூர் அரசு இரு அணைகளைக்கட்டி வருகின்றது. இதன் காரணமாக தமிழ்நாட்டில் தஞ்சை மாவட்ட விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்று தமிழ்நாடு அரசு ஆட்சேபம் எழுப்பியது. என்றாலும் மைசூர் அரசு இந்த ஆட்சேபனைகளைப் பொருட்படுத்தவில்லை. இதன் காரணமாக எழுந்த பிரச்னைகளை சமரசப் பேச்சின்மூலம் தீர்க்க மத்திய அரசு முன்வந்தது.

இந்த அடிப்படையிலேயே சென்னையில் மத்திய நீர்ப்பாசன துணைமந்திரி டாக்டர் கே. எல். ராவ் தலைமையில் மாநாடுகள் நடைபெற்றது. இதில் மைசூர் முதல்வர் திரு. வீரேந்திரபாட்டீல், கேரள முதல்வர் திரு. அச்சுத மேனன், தமிழ்நாடு முதல்வர் திரு. கருணாநிதி முதலியவர்கள் கலந்து கொண்டார்கள். காவேரி தண்ணீர் பங்கீடு சம்பந்தமாக இந்த மாநாட்டில் அறுதியான முடிவு ஒன்று ஏற்படும் என்று முதலில் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் முதல் அமைச்சர்கள் மாநாட்டில் எதுவித முடிவும் ஏற்படவில்லை.

இந்த மாநாட்டில் முடிவு எதுவும் ஏற்படாவிட்டாலும் கருத்து வேற்றுமைகள் பெருமளவில் குறைந்துவிட்டதாக மத்திய நீர்ப்பாசன துணைமந்திரி டாக்டர் கே எல் ராவ் தெரிவித்தார்.

# 'ஹிட்லர் போல அங்கத்தவர் பேசுகிறார்'

## இந்திரா கண்டனம்

புதுடில்லி, மே 17

'நாட்டில் உள்ள எல்லாக் கட்சிகளும் கிராமம் கிராமமாக சென்று பல்வேறு வகுப்பினரிடையே இணக்கமான உறவுக்கான உணர்வுகளை உண்டாக்க வேண்டும். இறுதியாக சிறுபான்மை வகுப்பினருக்கு இதன்மூலம் தான் தக்க பாதுகாப்பை ஏற்படுத்த முடியும். இது சம்பந்தமாக எவரும் பொறுப்பைத் தட்டிக் கழித்துவிட முடியாது. நிச்சயமாக நான் பொறுப்பை தட்டிக் கழித்துவிடவில்லை.'

இவ்வாறு மகாராஷ்டிரத்தில் வெடித்த வகுப்புக் கலவரங்கள்பற்றி லோகசபையில் நடைபெற்ற மூன்று மணிநேர விவாதத்தின் போது பிரதமர் இந்திரா காந்தி குறிப்பிட்டார்.

மேலும் அவர் 'முஸ்லிம்கள்மீதும், இதர எல்லா சிறுபான்மை வகுப்பினர் மீதும் தாக்குதல் நடத்த திரு. வாஜ்பாயி இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியிருக்கிறார். ஹிட்லரைப் போல இவர் அறிவிப்பு செய்திருக்கிறார். ஹிட்லர் எவ்வாறு பேசினார்என்பதையும், அவர் உபயோகித்த சொற்களையும் நான் அறிவேன்'' என்றும் கூறினார்.

அண்மையில் நடந்த 23 வகுப்புக்கலவரங்களில் 22 கலவரங்கள் சிறுபான்மை வகுப்பினரால் ஆரம்பிக்கப்பட்டன. என்ற அறிக்கையை திரு. வாஜ்பாயி எடுத்துக்காட்டினார்.

முஸ்லீம்களை காங்கிரஸ் அணுகும் முறை தவறு. காங்கிரஸ் தோற்கடிக்கப்பட்டால் முஸ்லீம்கள் அழிக்கப் படுவார்கஅ என முஸ்லிம்களிடம் காங்கிரஸ் பயமுறுத்துவதாக திரு. நாத் பாய் (பி. சோ)குற்றம் சாட்டினார்.

கலவரத்தை அடக்கத் தவறுகிற அரசுஉடனடியாக ராஜினாமா செய்தால் அது ஓர் ஆரோக்கியமான மரபாக இருக்கும் என திரு. எஸ். கே பட்டில் (பழைய காங்கிரஸ்) கூறினார்.

சபையில் 'கோரம்' இல்லாததால் சபை ஒத்திவைக் கப்பட்டுக்கு ...

# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ. அன்ட் 61 மீ.**

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-30 முஸ்லிம்நிகழ்ச்சி.

**344 மீ. அன்ட் 49 மீ.**

காலை 8-45 பேச்சு, 9 03 செய்திச்சுருக்கம், 9-00 சித்திரம், 9-30 கவிஅரங்கம், 10-00 செய்திச்சுருக்கம், 10-03 சித்திரம், 10-30 முஸ்லிம்நிகழ்ச்சி, 11-15 இஸ்லாமியகீதம்.

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 தொழிலாளர்சேட்டவை, 1-00 கதம்ப இசை, 1-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ. அன்ட் 61 மீ.**

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 சங்கமம் 5 00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-30 நாளையசந்ததி.

இரவு 6-15 வயலின், 6-30 கிராம சஞ்சிகை, 7 00 செய்திச்சுருக்கம், 7-03 கிராமசஞ்சிகை, 7-15 பாட்டு, 7-45 ஐ. நா. சித்திரம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 கதாப்பிரசங்கம், 10-30 செய்திச்சுருக்கம்.

# வேதாரணிய பாத யாத்திரை

சென்னை, மே 17

இந்திய தேசிய இயக்கப் போராட்டகாலத்தில் முக்கியத்துவம் பெற்ற வேதாரண்யத்துக்கு நேற்று மாணவர் கோஷ்டி ஒன்றை பாதயாத்திரையை ஆரம்பித்துள்ளது.

வதற்கு சிபார்சு செய்தனர். இதற்கும் தமிழரசாருக்கும் எவ்வித தொடர்புமில்லை, நாதன் உட்பட மற்றும் பலரும் பேசினர்.

# 'உலகின் முதல் சோஷலிச வாதி புத்தபகவான்'

பண்டாரவளை, ஞாயிறு

''புத்தபகவானே உலகின் முதல்சோஷலிசவாதி முதன் முதலாக சங்க சமாஜத்தை யுருவாக்கி காரல்மாக்ஸ், லெனின் ஆகிய சோஷலிசத் தலைவர்களுக்கு முன்னர் சோஷலிசத்தைப் போதிக்கவும் சோஷலிச அரசை நிர்ணயிக்கவும் செய்தார். புத்தபகவானால் போதிக்கப்பட்ட சோஷலிசத்தைப் போதிக்க மறுப்பவர்களுக்கு இதை நான் உறுதியாகக் கூறவிரும்புகிறேன்'

பண்டாரவளையில் நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய வண ஹெப்பிட்டிகெதர குணசீகதேரோ மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும்தொடர்ந்து பேசுகையில்' சிங்களமன்னர் நாட்டை ஆண்ட காலத்தில் நிலங்கள்யாவும் அம்மன்னர் வசம் இருந்தன. மக்கள் அவற்றில் பயிர் செய்து தங்களுக்குவேண்டியதை எடுத்துவிட்டு மிகுதியை மன்னருக்கு கொடுத்து விடுவார்கள். நிலங்கள் யாவும் இன்று முதலாளித்துவ வர்க்கத்தினர் பிரித்துப் பிரித்து ஒவ்வொருவருக்கும் சொந்தமாக்கி வேலிபோட்டு வைத்திருப்பதுபோல் அன்று இருக்கவில்லை. ஒரே பரந்த நிலமாகமக்கள் யாவருக்கும் பொதுவானதாகவே இருந்தது.

இத்தகைய சோஷலிச முறையை முதலாளித்துவத்தை எதிர்த்துக் கொண்டுவரத்தான் சோஷலிச வாதிகள் வறிய விவசாயிகள். தொழிலாளர்களின் உதவியுடன் திருமதி பண்டாரநாயக்காவின் தலைமையில் போராடுகிறார்கள். ஏழை மக்களைச் சுரண்டி வாழும் முதலாளித்துவ வர்க்கத்தினரை எதிர்வரும் பொதுத் தேர்தலில் மக்கள் வீழ்ச்சியடையச் செய்ய வேண்டும் என்றுகூறினார்.


அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த

**மீலாத் வாழ்த்துக்கள்**

# தங்க மாளிகை

கன்னாதிட்டி — யாழ்ப்பாணம்.

போன்: 281





# விங்க் மைபோட்டி

பரிசுக்குரிய எண்கள்

19-5-70 செவ்வாய்க்கிழமை

பிற்பகல் 3 மணிக்கு தெரியப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

''நிச்சயமாக மனிதன் நஷ்டத்திருலிக்கிருன்; விசுவாசங்கொண்டு நன்மை புரிந்தவர்களைத் தவிர...''

— குர்ஆன்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் வைகாசி மாதம் 4-ந் திகதி (18-5-70)


## நிறந் திமிர் ஒழியுமா?

ஒலிம்பிக் விளையாட்டுக்கள் இயக்கத்திலிருந்து தென்னுபிரிக்கா ஒதுக்கப்பட்டுள்ளது. சகல விஷயங்களிலும் நிறபேதக் கொள்கையை அனுஷ்டித்துவரும் தென்னுபிரிக்கா விளையாட்டுத்துறையிலும் இக் கொள்கையைக் கடைப்பிடித்து வருவதைத் தொடர்ந்து சர்வதேச விளையாட்டு இயக்கத்திலிருந்தும் அதனை ஒதுக்கிவைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தீர்மானமாவது தென்னுபிரிக்காவின் நிறத்திமிர்க்கொள்கையை மாற்றியமைக்க உதவுமா?

தென்னுபிரிக்காவின் நிறத்திமிர் உலகறிந்த விஷயம். மோகன்தாஸ் கரம சாந்த் காந்தி, மகாத்மா காந்தி என உலகம் போற்றுவதற்கு மூலகாரணமாக அமைந்ததே தென்னுபிரிக்காவின் நிறத்திமிரை தீர்த்து அவர் ஆரம்பித்த போராட்டம்தான், அன்று தொடங்கி இன்றுவரையும் தென்னுபிரிக்காவின் நிறத்திமிரை ஒழித்துக்கட்டப் பலரும் பலவித நடவடிக்கைகளையும் முயற்சிகளையும் செய்துவந்திருக்கின்றனர். தென்னுபிரிக்காவின் நிறத்திமிர்க் கொள்கைக்குச் சாவுமணி அடிக்கலாமென்ற நோக்கத்துடன் ஐ. நா. சபையில் அதற்கு எதிராகப் பல பிரேரணைகள் கொண்டு வரப்பட்டு அவை தீர்மானங்களாகவும் நிறைவேற்றப்பட்டன. ஆயுதவிநியோகத் தடை, பொருளாதாரத் தடை ஆகிய நடவடிக்கைகள் பற்றியும் கூட ஐ. நா. சபையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஆயினும் இந்தத் தீர்மானங்களை ஐ. நா அங்கத்துவ நாடுகள் செயல்படுத்தாத காரணத்தினுலோ வேறு காரணங்களினுலோ அவை வெற்றியளிக்கவில்லை. காமன்வெல்த் அங்கத்துவத்தை இழந்தும் கூட தென்னுபிரிக்காவும் தனது நிறத்திமிர்க் கொள்கையை கைவிடவில்லை. பொருளாதாரத்தடைத் தீர்மானமே ஒரு கேலிக்கூத்தாகிவிட்டது.

கூடைப்பந்தாட்டம், டென்னிஸ், குத்துச்சண்டை மற்றும் இதுபோன்ற பல விளையாட்டுப்போட்டிகளில் பங்கு கொள்வதற்குத் தென்னுபிரிக்காவுக்கு ஏற்கனவே தடைவிதிக்கப்பட்டிருக்கிறது. என்றுலும் சர்வதேச ஒலிம்பிக் விளையாட்டு இயக்கத்திலிருந்து ஒதுக்கிவைக்கப்பட்ட ஒரேயொரு நாடு தென்னுபிரிக்காமட்டும்தான் என்பதை தென்னுபிரிக்க மக்கள் உணர்ந்துகொள்ள முடியாதவர்களல்லர்.

ஒலிம்பிக் விளையாட்டு இயக்கத்திலிருந்து ஒதுக்கிவைக்கப்பட்டாலும் தென்னுபிரிக்க அரசாங்கம் தனது தவறை உணர்ந்து திருத்திக்கொள்ளுமென்று எதிர்பார்ப்பதற்கில்லை. ஆனுலும் இது தென்னுபிரிக்காவின் நிறவெறித் திமிரை அடக்குவதற்கு ஒருபடியாகவாவது உதவவேண்டும். நிறத்திமிரை ஒழிப்பதற்கு வெளியார் செய்யும் முயற்சியை விட அந்நாட்டு இளைஞர்களினதும் மக்களினதும் மனமாற்றத்திலும் முயற்சியிலுமே இது பெரிதும் தங்கியுள்ளது.

## 'கட்சியற்ற ஜனநாயகம்'

சென்னை காந்திஅமைதி நிலையத்திலே நடைபெற்ற ஒரு கருத்தரங்கில், சர்வசேவா சங்கத் தலைவர் திரு. ஜகந்நாதன் பேசுகையில், கட்சியற்ற ஜனநாயகத்தை உருவாக்க வேண்டுமென்று அறிவுறுத்துகின்ருர். 'கிராமம் ஒரு குடும்பம் ஆக வேண்டும் என்று நாம் ஒருபுறம் ... பிரிவினைகளையும் பல கட்சிகளும் ஏற்படுத்துவதாயின் அதனுல் மக்களுக்கு என்ன நன்மை கிடைக்க முடியும்? மக்களின் நல்வாழ்வும் ஒற்றுமையுமே மேலான குறிக்கோள்களாயின், கட்சிப் போட்டிகளால் அவை இதுவரை எவ்வளவுதூரம் கைகூடியுள்ளன அல்லது பாதிக்கப்பட்டுள்ளன என்பதை ...



# 'தரகர் வேண்டாம நேரடியாகப் போவோம்'

**கோப்பாய்த் தொகுதியின் சுதந்திரக் கட்சி வேட்பாளரான திரு எம். துரைராஜா வடமாகாணத்தில் போட்டியிடும் ஒரே சுதந்திரக்கட்சி அபேட்சகராவர். சுதந்திரக் கட்சி வடமாகாணக் கிளையின் அமைப்பாளர்களில் முக்கியமானவர். கடந்த தேர்தலில் இத் தொகுதியில் இவர் சமசமாஜக்கட்சியில் போட்டியிட்டுத் தோற்றவர், தேர்தலில் தாம் வெற்றியீட்டும் பட்சத்தில் தமது தொகுதிக்குத் தாம் ஆற்றவிருக்கும் பணிகள் பற்றி இங்கே விளக்கியுள்ளார்.**

தமிழ்க் காங்கிரசும், தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகளும் யூ. என். பி. கட்சியுடனும். ஸ்ரீலங்காக் கட்சியுடனும் தரகுபேசி கடந்த காலங்களில் என்ன உதவிகளைப் பெற்ருர்கள்? எண்ணிப்பாருங்கள்! எம்மில் எவ்வளவுபேர் அரசாங்க உத்தியோகத்திற்கு தெரிவு செய்யப்பட்டார்கள். அச்சுவேலி ஆஸ்பத்திரி அபிவிருத்தி அடைந்ததா? ஆஸ்பத்திரிகளில் நோயாளிகளுக்கு ஒருநேரம் சோறு கொடுக்கிருர்களா? பாடசாலைகளும் கல்லூரிகளும் பக்குவமாகப் பேணிப் பாதுகாக்கப்படுகிறதா? அரசாங்கக் கட்சி அங்கத்தவர்களை அனுப்பிய தொகுதிகளில் எவ்வளவோ அபிவிருத்தி வேலைகள் உண்டாக்கப்பட்டு இருக்கின்றன. அப்பகுதி வாலிபர்களுக்கு வேலைகள் வழங்கப்படுகின்றன. அந்நிய நாட்டுப் பொருள் உதவியுடன் அமைக்கப்பட்ட அத் தொழிற்சாலைகளும் அரசாங்கக் கட்சி பிரதிநிதிகளை அனுப்பிய பகுதிகளிலே தான் தொடங்கப்பட்டிருக்கின்றன. ஆனுல் எம் பிரதிநிதிகள் ஒட்டியிருந்தும் ஊடாடியும், உறவுகொண்டு திரிந்தும் ஒரு தொழிற்சாலையாவது தொடங்க முயற்சித்தார்களா! ஒரளவாவது படித்த தமிழ்வாலிபர்களது வேலையில்லாத் திண்டாட்டத்தைம் போக்கினுர்களா? ஒன்றுமே இல்லை தரகுபேசி யூ. என். பி. யுடன் சல்லாபித்தார்களே ஒழிய தமிழ் மக்களுக்கு இவர்கள் சாதித்தது என்ன? யு. என். பியுடன் தமிழ்அரசுக் கட்சியினர் ஒப்பந்தம் செய்தார்கள்' அவ்வொப்பந்தம்தான் என்ன? மக்களுக்கு ஏன் இவற்றை எடுத்துக் கூறக கூடாதா? என்று கேட்டால் 'அது எங்களுக்கும் டட்லிக்கும் இடையில் ஏற்பட்டதோர் சம்மதம்' என்கிருர்கள். தமிழ் மக்களோ இப்பதில் கேட்டு ஏமாளியாகினர். முற்போக்குச் சக்திகளை முறியடிக்கவும் ஏழைப் பொதுமக்களை ஏமாற்றவும் பதவிகளைப் பறிபோகாமல் பார்த்துக்கொள்ளவும், பிற்போக்குச் சக்திகளின் கும்பலை அதிகாரத்தில் இருக்கவைப்பதற்குமே டட்லி-செல்வா ஒப்பந்தம் இன்றும் இரகசியமாக வைக்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தமிழ் மக்கள் அறிந்துவிட்டனர். தமிழ்மக்களை ஏமாற்றித் தம் வாழ்வை ருசிகண்டவர்கள் தமிழரசுக்கட்சியும், தமிழ்க்காங்கிரஸும். இவ்விரு கட்சியினரும் படுபிற்போக்குத்தனமான கொள்கைகளைக்கொண்ட அண்ணன் தம்பிக் கட்சி என்பதை அனைத்து உலகமும் அறியும். டட்லியைப் பிரதமராக்குவதே இவர்களது கொள்கையும் குறிக்கோளுமாகும். சிங்கள 'சிறீ' என்றதும் சீறிப்பாய்ந்த இப்பேர்வழிகள் இன்ரே உறுமாமல் பொருமாமல் சிங்களச் சிறீ கார்களில் ஊர்வலம் வருகிருர்களே! தமிழ் அரசாங்க உத்தியோகத்தர்களைப் பார்த்துச் சிங்களம் படியாதீர்கள் என்ருர்கள். இவற்றை நம்பியவர்கள் அரசாங்கத்தின் கெடுபிடியால் உத்தியோகத்திலிருந்து விடுபட்டு இன்று வீதி எங்கும் திரிவதை இத்தமிழரசுவாதிகளும், தமிழ்த் தலைவர்களும் கண்டு இது அவர்கள் தலைவிதி என்று பார்த்துக்கொண்டே இருக்கிருர்களே. தமிழ்மக்களின் நன்மைக்காக சிறீ லங்கா சுதந்திரக்கட்சியுடன் தமது பொருளை மதிப்புடன் நல்ல விலைக்கு விற்கத் தெரியாத இத்தரகர்களை இன்னும் நம்புவதா? இனியும் இவர்களுக்கு நீங்கள் வாக்களிப்பதா? தமிழ்க்காங்கிரஸ் தான் சாதித்ததென்ன? ஒரே ஒரு சாதனை. நெடுங்காலந் தொட்டு யு என் பியின் தாசர்களாக வாழ்வதே. வகுப்புவாதக் கும்பல் யு என் பியுடன் இரண்டறக் கலந்து முதலாளிவர்க்கத்தைத் தட்டிக்கொடுக்கும் இக்கட்சியை இன்னும் தமிழ் மக்கள் பின்பற்றுவதா? மறந்துவிட்டீர்களா? பொலநறுவை வீரன் சீ பீ டி. வெலிமடை வீரன் ராஜரத்தினு, காலி தஹநாயகா, அவிசாவலை பிலிப்பு, பண்டாரநாயகா-செல்வநாயகம் ஒப்பந்தத்தை முறியடிக்க பாதயாத்திரை மேற்கொண்ட ஜே ஆர் ஜயவர்த்தனு ஆகியோர் தமிழினத்திற்கு மறக்கவொண்ணுத் தீங்கு செய்து சுதந்திரக் கட்சிக்கும் கெட்ட பேர் எடுத்துக் கொடுத்தார்கள். இந்த யு என் பியிலிருந்து மறைமுக வேடம்போட்டு உறவாடும் தமிழ்க்காங்கிரஸை எதற்காக ஆதரிக்க வேண்டும்? ஆகவே தன்மானம் பேணுவோம். தரகர்களைத் தகர்த்தெறிவோம். வடபகுதியில் மட்டும் ஏன் ஐக்கிய தேசியக்கட்சி போட்டிபோடவில்லை. இது ஒன்றே ஒப்பந்தத்திற்குச் சான்ருகும்.

### தமிழினம் காப்பது எப்படி?

தேசிய ஐக்கிய இன ஒற்றுமை பற்றி ஓயாதுசொல்லி வந்த சேர் பொன். அருணுசலம் மகாதேவா அவர்களை அன்று தூற்றியவர்கள் இன்று போற்றப்படுகிருர்கள். காலத்திற்குக் காலம் அறப்போராட்டம் என்றும் அகிம்சைப் பாதையென்றும் அழகு தமிழில் பேசி எமது அடிப்படை உரிமைகளையே அழகாகப் பறியவிட்டு ...

# தேர்தல் போட்டி-1970

இலங்கையில் 7-வது வாரம் ...

### ஆசிரியருக்கு கடிதங்கள்

## விஸ்கோத்து மாமிச பட்சணமல்ல

சைவ பரிபாலன சபையார் நடத்திய சைவ மகா நாட்டில் தலைமைவகித்த தருமையாதீன மகா வித்துவான் சி. அருணைவடிவேல் முதலியார் ஒரு சந்தர்ப்பத்தில் விஸ்கோத்து மாமிச பட்சணமெனக் கூறியதாக ஒருசெய்தி 'ஈழநாடு' இதழில் வெளியாகியிருந்தது

'கடவுள் பல வேடங்களை எடுத்துக்கொள்வர். அவற்றுள் சில சாந்தரூபமாகவுஞ் சில கோர ரூபமுள்ளனவாக இருக்கும். இருவகையான ரூபங்களும் அருள்வடிவங்களே. எதனைப் போல வெனின் கோதுமை, சீனி முதலிய பொருட்களைச் சேர்த்துத் தயாரிக்கப்படும் விஸ்கோத்துப் பல உருவங்களில் அமைந்திருக்கும் அங்ஙனமாகத் தயாரிக்கும் விஸ்கோத்தை மீன் வடிவமாகவோ அல்லது கோழி வடிவமாகவோ தயாரித்தால் சைவ உணவு அருந்துவோர் அவற்றை உண்ண அருவருப்பர் உண்மையாக அவ்வடிவங்களில் அமைந்த விஸ்கோத்தில் மாமிச பதார்த்தங்கள் கலக்கப்படவில்லை. ஆனுலும் அவற்றின் வடிவம் அவ்வாருன கருத்தை உண்டாக்குகிறது. அதனைப்போல இறைவனின் கோரவடிவங்களும் அருட்டன்மை உடையனவானுலும் அவற்றின் கோரத்தன்மை அச்சத்தை விளைவிக்கின்றன'

இக்கருத்தை விளக்கவே விஸ்கோத்து உவமானத்தை பேராசிரியர் அருணைவடிவேல் முதலியார் எடுத்துக் காட்டினுர்.

மு மயில்வாகனம்,
சமயப் பிரசார அமைச்சர்
சைவபரிபாலனசபை
யாழ்ப்பாணம்.

0 0 0

## புதன்-சூரிய கிரகணம்

சென்ற 9-5-70ல் நிகழ்ந்த புதன்-சூரிய கிரகணத்துக்குப் புத சந்தரணம் என்ற பெயரே பொருத்தமானதென்றும் கிரகணம் என்பது தவறு என்றும் இதற்கு சான்ருக மட்டுவில் ஸ்ரீசுப்பிரமணியஐயர் F R A S எழுதிய பஞ்சாங்கத்தில் சந்தரணம் என்றே குறிப்பிடப்பட்டிருக்கிறதென்றும் 16-5-70 'ஈழநாடு' இதழில் திரு வ மகாதேவன், B A Dip-in-Ed. ஒருகடிதம் எழுதியுள்ளார்.

9-5-70 'ஈழநாடு' இதழில் நான் எழுதியதுபோல கிரகணம் ...

# 'முதலாளித்துவக் கட்சிகளை ஒழித்துக்கட்டுக'

கோப்பாய், ஞாயிறு

''இன்று இலங்கையில் முதலாளி தொழிலாளி வர்க்கப்போராட்டமே நிகழ்ந்து வருகின்றது. கடந்த பல ஆண்டுகளில் இத்தகைய போராட்டங்கள் பல நாடுகளில் நடைபெற்றுத்தொழிலாளித்துவம் வெற்றியீட்டி முதலாளித்துவம் முறியடிக்கப்படடது சரித்திர வரலாறுகள் கூறும் சான்றுகளாகும். இலங்கையின் எதிர்வரும் பொதுத்தேர்தலில் முதலாளித்துவமா அல்லது தொழிலாளவர்க்கமா அரசாங்கம் அமைப்பது என்பதேயாகும். இது சமதான ரீதியான போராட்டமாகும்.''

இவ்வாறு தம்பாலைச் சந்திக்கருகாமையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தற் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் யாழ் மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கூட்டுச் செயலாளர் திரு. எஸ். வைத்திலிங்கம் கூறினுர்.

கோப்பாய் தொகுதி அபேட்சகர் திரு எம் துரைராசாவை ஆதரித்து திரு. எஸ். நடராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத் திரு. வைத்திலிங்கம்மேலும் பசுகையில் கூறியதாவது:

''கடந்த 5 ஆண்டுகளில் தமிழரசுக்கட்சியினரும் தமிழ்க்காங்கிரஸ் கட்சியினரும் யூ என் பி. யின் அடிவருடிகளாக முதலாளித்துவத்தை வளர்த்துவந்தார்கள், முதலாளித்துவ அரசாங்கத்தை எமது தமிழ்க் கட்சிகள் ஆதரித்ததன்காரணமாக தொழிலாளர்கள் இன்னல்கள் மத்தியில் வாழ்கிருர்கள். நாட்டின் பொருளாதாரம் மட்டப்படுத்தப்பட்டது. மக்களின் வாழ்க்கைத்தரம் 40 வீதம் உயர்த்தப்பட்டுள்ளது வேலையில்லாப்பிரச்னை வளர்ந்து வருகிறது. இவையாவும் யூ. என். பி. அரசாங்கத்தின் பெருஞ்சாதனைகளாகும். எனவே தொழிலாளர்கள் சிறப்புடன் வாழ்வதற்கும் நாட்டின் பொருளாதார வளம் சிறப்பதற்கும் முதலாளித்துவக்கட்சிகளை ஒழித்துக்கட்டுவதே தமிழ் மக்களின் தலையாய கடமையாகும்.''

—

## 'கூட்டணியினரை அனுப்புக'

புத்தூர், ஞாயிறு

திரு. வி பொன்னம்பலம் பேசியதாவது:

''ஏழைகளும், விவசாயிளும் ஒன்று சேர்ந்து கூட்டணி அபேட்சகர்களை ஆட்சிமன்றம் அனுப்பவேண்டும் பெரும்பான்மையாக கூட்டணி வேட்பாளர்களை ஆட்சிமன்றம் அனுப்புவதின் மூலமே தமிழ்மக்களின் குறைகளைத் தீர்க்கக்கூடிய ஒரு கூட்டரசாங்கத்தை அமைக்கலாம்.

'பங்கீட்டரிசி ஒரு கொத்தாகக் குறைக்கப்பட்ட பொழுது எந்தவொருதமிழ் அரசியல் கட்சிகளும் அதை எதிர்த்து குரலெழுப்பவில்லை' யென்று திரு. பொன்னம்பலம் சொன்னுர்.

நல்லூர்த்தொகுதி லங்கா சமசமாஜக் கட்சி வேட்பாளர் திரு. வி. சச்சிதானந்தம் பேசுகையில், மாவட்ட சபையைப் பெறுவதற்காக திருமலைத் துறைமுகத்தை தேசியமயமாக்க சமஷ்டிக் கட்சியினர் ஒப்புக்கொண்டனரென்றும், மாவட்ட சபைக்காகவே சிங்களச் சட்டத்தை எதிர்க்காமலிருந்தனரென்றும் குறிப்பிட்டு. மாவட்டசபை கிடைத்திருந்தால் தமிழ்மக்கள் எதுவித பயனும் அடையமுடியாதென்றும் அதற்குக் காரணம், மாகாண அதிபதிதான் மாவட்டசபைக்குத் தலைவராக இருப்பாரென்றும் அவர் சொற்படிதான் எதுவும் நடக்குமெனவும் குறிப்பிட்டார்.

ஜனுப் எஸ். எம் மீருன் சாகிப், கே. தவஞானம், எஸ் பி. ராசா ஆகியோர் உட்படப் பலர் உரை நிகழ்த்தினர்,

# 'எதிரிகளிடம் துப்பாக்கிகளும் கொட்டன்களும் இருந்தன'
## துன்னலை மூதாட்டி கொலை வழக்கில் சாட்சியம்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

''சம்பவநாள் நானும் எனது மைத்துணர் கணபதியும் கந்தன் வீட்டில் வெங் ... குடத்தனையைச் சேர்ந்த வள்ளி சின்னக்குட்டி என்னும் வயோதிப மாதை துப் பாக்கியால் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர் திரு. ஜகந்நாதன் பேசுகையில், கட்சியற்ற ஜனநாயகத்தை உருவாக்க வேண்டுமென்று அறிவுறுத்துகின்ருர். 'கிராமம் ஒரு குடும்[illegible] ஆக வேண்டும் என்று நாம் ஒருபுறம் முயன்று கொண்டிருக்க இன்னொருபுறம் கட்சி அரசியல்வாதிகள் கிராம சமுதாயத்தைப் பல்வேறு கட்சிகளாகப் பிளவுபடுத்திக் கொண்டிருக்கிருர்கள். தேர்தலுக்குத் தேர்தல் கிராமம் தோறும் நெருப்பை வைத்துக் கொண்டே போகிருர்கள். இந்தக் கட்சிக்காரர்களின் பேயாட்டத்திலிருந்து கிராம சமுதாயத்தை எப்படி மீட்பது என்ற கவலை நமக்கு ஏற்பட்டிருக்கிறது' என்று கூறுகிருர்.

இவ்விஷயமாகப் பூனுவில் சர்வசேவா சங்கம் கூடி மக்கள் அரசியலை வலிமையாக்கி, கட்சியற்ற ஜனநாயகத்தை உருவாக்கும் இயக்கத்தையும் கிராமதானஇயக்கத்தோடு இணைந்தே செய்ய வேண்டுமென்று முடிவு செய்துள்ளது. ஜெயபிரகாஷ் நாராயண் அவர்கள் இவ்விஷமாகக் கூறுகையில், இப்போது நடைமுறையில் அபேட்சகர்களை அரசியல்கட்சிகள் தீர்மானிக்கின்றன இனி நாம் அதை அனுமதிக்கக் கூடாது. அந்த அபேட்சகரை அந்தந்த ஸ்தலத்திலுள்ள கிராமப் பிரதிநிதிகள் கூடித் தீர்மானிக்க வேண்டும். பலர் அபேட்சகராக முன்வந்தால், அதையும் அந்தக் கிராமப் பிரதிநிதிகள் சபை தீர்மானிக்கும். மாற்றத்தக்க தனிவாக்கு மூலமோ, திருவுளச்சீட்டு மூலமோ, பெரும்பான்மை வாக்குமூலமோ ஒரு முடிவு செய்யலாம். அவருக்கு தேர்தல்செலவு இராது. அவர் எந்தக் கட்சியிலும் சேர்ந்தவராக இருக்க மாட்டார்' என்றும் குறிப்பிடுகின்ருர்.

ஆனல் ஜனநாயகத்துக்கு இலட்சணம் கட்சிகளே என்றும் கட்சிகள் இல்லாவிட்டால், சர்வாதிகார ஆட்சி ஏற்பட்டு விடலாமென்றும் ஒரு சாரார் வாதிக்கலாம். நாட்டின் நன்மையைவிட கட்சியின் நன்மையையே பெரிதாகக் கருதுவதுடன் மக்களிடையே பலபல முடியும்? மக்களின் நல்வாழ்வும் ஒற்றுமையுமே மேலான குறிக்கோள்களாயின், கட்சிப் போட்டிகளால் அவை இதுவரை எவ்வளவுதூரம் கைகூடியுள்ளன அல்லது பாதிக்கப்பட்டுள்ளன என்பதை குறித்து ஆலோசிக்க வேண்டிய சமயம் வந்துவிட்டது.

இந்தியாவிலே கட்சிகளின் அடிப்படையில் தேர்தல் போட்டிகள் பல வருடங்களாக நடந்து வருகின்றன எனினும், மக்களின் குறைகள் வெகுவாக நீங்கவில்லை என்பதற்கு அங்கு நடைபெறும் பலாத்கார இயக்கங்களே சான்று. அண்டையிலுள்ள நாட்டின் அனுபவம் நமக்கும் பயன்படுவதாக இருக்க வேண்டும். குறைவிலாது உயிர்கள் வாழ்வதுடன் மக்களின் சுதந்திரத்தையும் காக்கக்கூடிய முறையில் நமது அரசியலைத் தக்கபடி திருத்திக் கொள்ளக் கூடிய உரிமையும் கடமையும் நமக்கு உண்டு. கட்சி அரசியலால் நன்மை இருப்பின் அதையே வைத்துக் கொள்ளலாம். இன்றேல் அதை மாற்றி வேறு முறைகளை வகுத்துக் கொள்ள நாம் தயங்கக் கூடாது.

## நேர்வழி...

(4ம்பக்கத் தொடர்ச்சி)

முனையிலும் வழிகாட்டக் கூடியவர்களாயிருந்தார்கள் மன்னர் பதவி வகித்த போதிலும் எளிமை வாழ்வை மேற்கொண்டார்கள். அஞை தயாயிருந்தார்கள், அண்ணலால்த் திகழ்ந்தார்கள். எந்தெந்தத் துறைகளிலெல்லாம் எங்களுக்கு முன்மாதிரி வேண்டுமோ அந்தந்தத் துறைகளிலெல்லாம் நாயகமவர்கள் எமக்கு வழிகாட்டியாய்த் திகழ்ந்து கொண்டிருக்கிருர்கள். அவர்கள் எந்த வாழ்க்கையைத் தம் பூவுலக வாழ்வின் போதுஅனுஷ்டித்தார்களோ அந்த வாழ்க்கைதான் இஸ்லாமிய வாழ்க்கையாகும். அழ்வாழ்க்கைஎங்கள் இலட்சியங்களைக் காப்பாற்றும். மிருக உணர்ச்சியைச் சிதைத்து எங்கும் எம் நிலையை உயர்த்தும். இங்கும் அங்கும் ஆனந்தத்தைத் தரும். உவ்வுன்னத வாழ்க்கையை நாம் நேரான வழியில் சீராக நடத்த எல்லாம் வல்ல நாயன் துணைபுரிவானக—ஆன்மீன்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970 ம் ஆண்டு மே மாதம் 18-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தேர்தல் போட்டி-1970

இலங்கையில் 7-வது ஆட்சி மன்றத்தின் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்கான பொதுத்தேர்தல் இம்மாதம் 27-ம் திகதியன்று நடைபெறவிருப்பது வாசகர்கள் அறிந்ததே. அதையொட்டி 'ஈழநாடு' ஒரு போட்டி நடாத்த ஏற்பாடு செய்திருக்கின்றது. அரசியற் கட்சிகளும் சுயேச்சை வேட்பாளர்களும் பெறும் ஆசனங்களைச் சரியாகக் குறிப்பிடும் வாசகருக்கு முதலாம் பரிசும் ஏறத்தாழ சரியான விடையனுப்பும் வாசகருக்கு 2-ம் பரிசும் அதற்கடுத்த படியான சரியான விடைக்கு 3-ம் பரிசும் வழங்கப்படும்.

போட்டியில் பங்குபற்ற விரும்புகின்றவர்கள் எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளும் சுயேச்சை வேட்பாளர்களும் பெறும் ஆசனங்களை இங்கே பிரசுரமாகும் கூப்பனில் உரிய இடத்தில் எழுதி "தேர்தல் போட்டி - 1970" ஈழநாடு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 26-5-70 க்குப் பிந்தாமல் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவேண்டும். குறித்த திகதிக்குப் பிந்திய கூப்பன்கள் எக்காரணங்களைக் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

ஒருவர் எத்தனை கூப்பன் வேண்டுமானுலும் அனுப்பலாம். நேரே கொடுக்க விரும்புவோர் "ஈழநாடு" அலுவலகத் தபால் பெட்டியில் சேர்க்கவும்.

**கேள்விகள்:**

1. இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு வடக்கு -கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.

2. அகில இலங்கைத்தமிழ் காங்கிரஸ் கட்சிக்கு வடக்கு கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.

3. ஐக்கிய தேசியக் கட்சிக்கு வடக்கு — கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.

4. கூட்டணிக்கட்சிக்கு வடக்கு - கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்

கூட்டணிக் கட்சியுள் அடங்குவன:

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மாஸ்கோ-பீக்கிங்), லங்கா சமசமாஜக் கட்சி என்பன.

5. சுயேட்சையாளர்களுக்கு வடக்கு-கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.

சுயேச்சைகளுள் அடங்குவன:

தமிழர் சுயாட்சிக் கழகம், இலங்கைத்தமிழர் ஒற்றுமை முன்னணி, சிங்கள சமாஜனக் கட்சி, இ: கதி,. க.மு கட்சி என்பன.

**பரிசு விபரங்கள் விரைவில் வெளிவரும்**

**'ஈழநாடு' ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.**

## 1970 தேர்தல் போட்டிக் "கூப்பன்"

## 'ஈழநாடு'

| | |
|---|---|
| இ. த. அ. கட்சி | |
| அ. இ. த. கா. கட்சி | |
| ஐ. தே. கட்சி | |
| கூ. கட்சி | |
| சுயேச்சை | |

பெயர் : ..............................

விலாசம் : ..............................

..............................

அன்று தூற்றியவர்கள் இன்று போற்றப்படுகிருர்கள். காலத்திற்குக் காலம் அறப்போராட்டம் என்றும் அகிம்சைப் பாதையென்றும் அழகு தமிழில் பேசி எமது அடிப்படை உரிமைகளையே அழகாகப் பறியவிட்டு அன்றும் இன்றும் தமிழரை இக்கட்டான நிலையில் வைத்து இதுவரை இன்பம் கண்ட தமிழ்த் தலைவர்களும் தமிழ்க் கட்சிகளும் இனி இருந்தென்ன! எனவே மக்களாட்சி மலரவும், உண்மையான தேசிய ஒற்றுமை வலுப்பெறவும் சோஷலிச அடிப்படையில் இயங்கி இனி அரசாங்கம் அமைக்கவிருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஒன்றே நமது உரிமை தரும் கட்சியாகும்.

## எது செய்வேன்

உங்கள் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டால் பின்வரும் விடயங்களில் கூடிய கவனமெடுத்து உடனடியாக தமிழ் மக்களுக்கு விமோசனம் அளிப்பேன்என்பதை உறுதிகூறுகிறேன்.

1 தமிழ்ப்பகுதிகள்வளம் பெறக்கூடிய முறையில் பொருளாதாரநிலை உயரக் கூடிய விதத்தில் கூட்டுறவு இயக்கங்கள் மூலம் வேலை வாய்ப்பை அமைத்துக் கொடுத்தல், அத்துடன் வேலையற்ற இளம் வாலிபர்களுக்கு தொழிற்சாலைநிறுவுவதன்மூலம் வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுத்தல்.

2 பட்டதாரிகளின் படிப்புக்கு ஏற்ற உத்தியோகமும் சம்பளமும் பெற்றுக் கொடுத்தல்.

3 பனம் பொருட்களை அபிவிருத்திசெய்தல்; வெளிநாடுகளில் விற்பனை செய்தல்.

4 வாழ்க்கைத்தரத்தை உயர்த்தல்.

5 வெங்காயம் உருளைக் கிழங்கு முதலிய விளைபொருட்களுக்கு நல்ல விலை பெற்றுக்கொடுத்தல், கிராம அபிவிருத்தி சிறுகைத் தொழில்களுக்குப் பாதுகாப்பளித்தல்.

6 வடக்கே புதிய தேபல்கலைக் கழகத்தை அமைத்தல்.

7 மகாவலி கங்கையை இரணைமடுவரைதிருப்ப திட்டங்கள் அமைத்தல்,

8 பஸ்போக்குவரத்து வசதிகளை கூடுதலாக ஏற்படுத்தல்.

9 மக்கள் வங்கிக் கிளைகளை அமைத்து கடன் வசதிகளை எல்லோரும்பெற உதவி செய்தல்'

10 மொழி பேதமின்றி ஆசிரியர்களுக்கு சம சம்பளம், தமிழ்ப் பகுதிகளில் தமிழ்ப்பண்டிதர் புலவர்கள் வித்துவான்களுக்கு சிங்களப் பண்டிதர் களுககுப் போன்ற சமசம்பளம் தமிழ்ப் பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் இதுவரை நிரப்பப்படாபல் இருக்கும் முதலாம் இரண்டாம் மூன்ரும் தர விசேட ஆசிரியர் பதவிகளை முறையே திரப்புதல்'

11. கோப்பாய், அச்சுவேலி ஆஸ்பத்திரிகளில் விஷேக சிகிச்சை வசதிகளும் மறு வசதிகளும் அளித்து அவற்றின் தரத்தைஉயர்த்துதல்.

பட்டிருக்கிறதென்றும் 16-5-70 'ஈழநாடு' இதழில் திரு வ மகாதேவன், BA Dip-in-Ed. ஒருகடிதம் எழுதியுள்ளார்.

9-5-70 'ஈழநாடு' இதழில் நான் எழுதியதுபோல கிரகணம் என்ற சொல்லினுல் சாதாரணமாகச் சூரிய-சந்திர கிரகணங்களையே மககள் கருதுவரெனினும், பொதுவாக வேறு கிரகங்கஅ சூரியனின் ஒரு பகுதியை மறயத்தலையும் அச்சொல் குறிகும் அபிதான சிந்தாமணி என்னும் அகராதியில் கிரகணம் என்ற பதத்தின் கருத்தை நோககின்இது நன்கு புலனுகும்.

மேலும் அபிதான சிந்தாமணியிலாவது, மதுரைத் தமிழ்ப் பேரகராதியிலாவது, மதராஸ் தமிழ் லெக்சிக்கனிலாவது அல்லது வெறெந்த சிறந்த அகராதியிலாவது சந்தரணம் என்ற சொல்லையே காணவில்லை எங்கிருந்துதான் இச்சொல்லைக் கண்டெடுத்தனரோ!

வை ச. செந்தில்நாதன்,
B A, Dip-in-Ed F R A S
வழக்கறிஞர்
வண்ணர்பண்ணை

## 'கச்சேரிகள் ஒழிக்கபபடும்'

செங்கடகலை-ஞாயிறு 'நாட்டின் அரசியல் அமைப்பு மட்டுமன்றி கச்சேரிமுறையுட்பட இலங்கையில் சகல நிர்வாகமுறைகளும் கூட்டணியினுல் நீக்கப் பட்டுவிடும்'

நெதலகமுவாவியில் நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய கூட்டணி வேட்பாளரான திரு. ரி. பி. சுபசிங்கா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் 'கூட்டணி பதவிக்கு வந்தால் மக்களுக் மக்கள் குழுக்கள்மூலம் அதிக அதிகாரத்தை வழங்கும். மக்கள் நட்டேின் நிர்வாகத்தில் நேரடித் தொடர்பு கொண்டார்களானுல் தற்போது சுகபோகங்களை அனுபவித்துவரும் முதலாளித்துவ வர்க்கத்தினர் தொடர்ந்தும் தங்கள் அதிகாரத்தைத் நிலைநாட்டமுடியாது; எனக குறிப்பிடடார்.

## ... கொலை வழக்கில் சாட்சியம்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

"சம்பவநாள் நானும் எனது மைத்துணர் கணபதியும் கந்தன் வீட்டில் வெங்காயம் துப்பரவு செய்துவிட்டு வீட்டுக்குப் போகப் புறப்பட்டோம். புறப்பட்டுப் போய்க்கொண்டிருக்கையில் பின்னுக்குச்சென்று கொண்டிருந்த எனக்கு 3-ம் எதிரி கொட்டனுல் அடித்தார். தொடர்ந்தும் அடிவிழுந்ததால் நிலத்தில் குளறிக்கொண்டு விழுந்தேன்" எனகுடத்தனையைச் சேர்ந்த விவசாயியான கந்தன் சின்னத்தம்பி ஒன்பவன் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரிக்கப்பட்ட கொலைவழக்கில் சாட்சியமளிக்கையில் கூறினுர்.

இவ்வழக்குதுன்னுலையைச் சேர்ந்த நா. சின்னப்பு, வ. ஆறுமுகம், த. செல்லத்தம்பி, த. செல்லக்கிளி, கோ. கனகன். க. தளையசிங்கம் ஆகியோர் இவ்வருடம் மாசி மாதம் 16-ம் திகதி குடத்தனையைச் சேர்ந்த வள்ளி சின்னக்குட்டி என்னும் வயோதிப மாதை துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்ததாகவும் க. சின்னத்தம்பி அடித்துப் படுகாயம் விளைவித்ததாகவும் பருத்தித்துறைப் பொலிசாரால் குற்றம்சாட்டித் தொடரப்பட்டது.

சின்னத்தம்பி தமது சாட்சியத்தில் தொடர்ந்து கூறியதாவது:

நான் வீட்டுக்குப் போய்க்கொண்டிருக்கையில் ஒழுங்கைக்கு ஊடாக வந்த எதிரிகளிடம் துப்பாக்கிகளும், கொட்டன்களும் இருந்தன. அதில் 1-ம், 2-ம் எதிரிகள் துப்பாக்கிகள் வைத்திருந்தனர். எனக்கு அடிவிழுந்த போது துப்பாக்கிவெடிச் சத்தம் கேட்டது எதிரிகள் துன்னுலையைச் சேர்ந்தவர்கள்.'

மு. கந்தையா, நா. பசுபதி ஆகியோர் சாட்சியமளித்தபின் மேல்விசாரணை இம் மாதம் 19-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## 'சமஷ்டி அமைப்பை இன்று ஏன் எதிர்கிருர்?'

கோப்பாய், ஞாயிறு

"எமது தலைவர் செல்வாவுக்கு அன்றைய யூ.என். பி. அரசாங்கம் மந்திரிப்பதவி அளித்திருந்தால் தமிழரசுக் கட்சியே தோன்றியிருக்க முடியாது என மற்றக் கட்சியினர் மேடைகளில் பிரசாரம்செய்கின்றனர். தமிழ் மக்களின் இழந்த உரிமைகளை மீண்டும் பெறுதற்கே தந்தை செல்வநாயகம் தமிழரசுக்கட்சியை ஆரம்பித்தாரே தவிர பதவி கிடைக்காத ஏமாற்றத்தினுல் அல்ல. இது கடந்தகாலங்களில் எமதுகட்சிக்கு பொது மக்கள் அளித்த ஆதரவில் இருந்தும் வளர்ச்சியிலிருந்தும் தெளிவாகிறது".

நேற்றுமாலை தொண்டமானுறுபாலத்துக்கருகாமையில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் தேர்தல்பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் ஜனுப் முத்துராசா மேற்கண்டவாறு கூறினுர்.

கோப்பாய் வேட்பாளர் திருகதிரவேலுப்பிள்ளைபருத்தித்துறை வேட்பாளர் திரு. துரைரத்தினம் ஆகியோரை ஆதரித்து இக்கூட்டம் திரு. தம்பிராசா தலைமையில் நடைபெற்றது.

திரு. முத்துராசா மேலும் கூறியதாவது:

"தமிழரசுக்கட்சியின் வளர்ச்சி தமிழ் மக்களின் எழுச்சியிலேயே தங்கியுள்ளது. இது கட்சியின் வரலாறு கூறும் சான்று 52-ம் ஆண்டு இரு அங்கத்தவர்களுடன் ஆட்சிமன்றம் சென்றகட்சி 65-ம் ஆண்டில் 14 அங்கத்தவர்களுடன் சென்றதற்குக் காரணம் மக்களின்மனஎழுச்சியேயாகும்.

## ராஜரத்தின...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தேசியக்கட்சியின் மேடைகளிலே ஏறிப் பேசி வருகின்ருர். இவரைப்போன்றுதான் இன்று துவேஷம் பேசி வரும் ஆர். ஜி. சேனநாயக்காவும் அரசியலில் செல்வாக்கை இழப்பார். நிச்சயமாக இந்த தேர்தலிலே திருகோணமலையில் கட்டுக்காசையும் இழப்பதோடு தம்பதெனியாவில் தோல்வியும் பெறுவார்.

மற்றும் பதியுதீன் முகமது, அனுராதபுர முன்னுள் எம். பி. இரனுயக்கா, திரு. தென்னக்கோன், மூதூர் முன்னுள் இரண்டாவது ஆட்சிமன்றஉறுப்பினர் மஜீத் ஆகியோரும் உரையாற்றினுர்கள்.

வியாபாரம்பெருக
விளம்பரம் செய்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org